www.tamilarangam.net

# விடுதலைப்பாதை

அன்பளிப்பு 3 சுவிஸ் பிராங்

பாதை -3 JULY. 1992 - ஆடி பயணம் - 9



'மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி'

செயலதிபர் தோழர்

## க.உமாமகேஸ்வரன் (முகுந்தன்)

தோழனே நீ எம்மை விட்டு மறைந்து விட்டதாக சிலர் கூறுகின்றார்கள். இல்லவே இல்லை. நீ எம்முடனேயே வாழ்கின்றாய். ஆம். உலகெங்கும் பரந்து வாழும் பல கோடி மக்களின் உள்ளங்களில் வாழ்கின்றாய். உன் நினைவுடனேயே நீ காட்டிய நேரிய வழியில் கழகத்தின் கொள்கை வழி நின்று மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்!!



மண்ணுக்காய் மக்களுக்காய்
தமிழினத்தின் விடுதலைக்காய்
தாழ்ந்தோரின் உயர்விற்காய்
மானிடத்தின் விடிவுக்காய்
வாழ்ந்தாய்! வாழ்வாய்!
'உமா' என்ற உன் நாமம்
உயிருள்ள வரை உயிர் வாழும்
இது உறுதி எம் தோழா!


அனைத்து அதிகாரங்களும் உழைக்கும் மக்களுக்கே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்றாவது வருட நினைவஞ்சலி

( 16 . 07 . 92 )



அமரர்

தோழர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்)

1945 - 1989

கறை படிந்த சமூகத்தில்
கால் வருடும் ஆள்வோரொழிக்க
காவியப் படை நடத்திய உனை
கயவர்தம் வஞ்சத்தால் வீழ்த்தினரோ
கண்ணீரில் துவழ்கின்றோம் தோழா- உன்
கல்பொறித்த மூன்றாண்டு நினைவினிலே

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE)**
**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (DPLF)**

2. Juli 1992

## எமது பார்வையில்.......

இராணுவ நடவடிக்கை இந்தா நடக்கப் போகிறது, அந்தா நடக்கப் போகிறது. வீட்டுக்கு ஒருவர் போருக்குத் தயாராகுங்கள் என புலிகள் அடிக்கடி கூறி வந்தனர். இராணுவமோ அடிக்கடி குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துவிட்டு எந்த இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடாதிருந்து வந்தனர்.

யாழ்ப்பாணத்துக்கு அடிக்கடி சென்று திரும்பிய சமாதானக் குழுக்களோ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வல்ல வழி, அரசியல்த் தீர்வே வழி எனவே யுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் எனக் கூறி வந்தனர்.

இதனால் இராணுவ நடவடிக்கை குடாநாட்டில் விரைவில் ஏற்படாது என மக்கள் நம்பி வந்தனர். அரசியல் அவதானிகளும் குடாநாட்டில் யுத்தம் ஏற்படாது என கூறி வந்தனர்.

ஆனால் இலங்கை இராணுவமோ 28.06.92 இல் திடீரென ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு யாழ்ப்பாணம் முல்லைத்தீவுப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இந்த இராணுவ நடவடிக்கைகள் இனித் தொடரலாம் என இப்போது நம்பப்படுகிறது.

இந்த இராணுவ நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் மக்கள் இல்லாத பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டதால் இதுவரை மக்களுக்கு பாரிய உயிர்ச் சேதங்கள் ஏற்படாது தவிர்க்கப்பட்டுள்ளன. ஆனால் ஊரடங்கு உத்தரவு நேரத்தில் வழக்கம் போல் மக்கள் நடமாடியதால் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்குப் பொதுமக்கள் சிலர் பலியாகியுள்ளனர்.

தெல்லிப்பளை அம்மன் கோவில் சேதப்பட்டதாகவும் அங்கு பொதுமக்கள் சிலர் பலியாகியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு இராணுவத்தினர் தரப்பில் கூறப்படும் காரணம் கோவில் வளவில் புலிகள் வாகன நடமாட்டம் காணப்பட்டதாகவும் அதனாலேயே அங்கு தாக்குதல் நடந்தது என்பதாகும். புலிகளின் கடந்த கால நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இராணுவத்தினரின் கூற்றை முற்றாக புறக்கணிக்க முடியாதுள்ளது.

கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் பொதுமக்களைக் கேடயமாக்கி புலிகள் இராணுவத்திடமிருந்து தம்மைப் பாதுகாத்த சம்பவங்கள் பலவுண்டு.

3. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வடமராச்சித் தாக்குதலில் புலிகள் தாம் தப்பி ஓடும் போது தாம் பாவித்த வாகனங்களை அகதிகள் தஞ்சமடைந்திருந்த பொது இடங்களுக்கு அருகே விட்டுச்சென்றதால் அந்த இடங்களில் இலங்கை இராணுவம் செய்த அனர்த்தங்களை மக்கள் இன்னும் மறந்து விடவில்லை.

யாழ் போதனா வைத்தியசாலையைத் தமது பாதுகாப்பிடமாகக் கொண்ட புலிகளின் நடவடிக்கைகளால் வைத்தியசாலை இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி நோயாளிகள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலர் உயிரிழந்தமை நினைவிருக்கலாம்.

அகதிகள் தங்கியிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரியை கேடயமாகப் பாவித்து இராணுவத்தினருடன் போரிட்டதை மக்கள் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள்.

எனவே புலிகள் இனியாவது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமது பலத்தைக் காட்ட முயற்சிப்பது, மக்களைக் கேடயமாகப் பாவிப்பதை தவிர்த்து மக்கள் செறிவில்லாத இடங்களில் இராணுவத்துடன் மோதட்டும். அழிவுகள் ஏற்பட்ட பின்னர் இராணுவத்தினரை விமர்சனம் செய்வதை விடுத்து முன்னதாக மக்களைப் பாதுகாக்கும் விதத்தில் புலிகள் தமது போராட்ட வழிமுறைகளை வகுத்துக் கொள்ளட்டும். மக்கள் அழிந்த பின்னர் மக்கள் அழிந்ததற்கான காரணத்தை ஆராய்வதால் எந்தப் பயனும் இல்லை. மக்கள் தமது பாதுகாப்பைத் தாமே தேடிக் கொள்வர். அதற்கு புலிகள் தடையாக இல்லாதிருந்தால் போதும்.



ஆசிய மாணவர் முன்னணியின் முன்னிலையில் கழக செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் உரையாற்றுகின்றார்.

**இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடுத்து "தோழர் உமாமகேஸ்வரன்" இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய போது - எமது போராட்டத்துக்கு ஆதரவு நல்கியவர்களுக்கு நன்றி தெரிவித்தும், போராட்டத்தில் தமது உயிரை நீத்த போராளிகள், பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தியும் 28.08.87 அன்று விடுத்த அறிக்கையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.**

அன்புடையீர்,

இன்று தமிழ் பேசும் மக்கள் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று நடந்து முடிந்த உடன்படிக்கைக்கான ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்கள், இன்றேல் அம் மக்களின் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. இத் தீர்வு தேசிய இனத்துக்கான தீர்வல்ல என்பது எமது நிலைப்பாடாகும். இவ் ஒப்பந்தத்திற்கு நாம் எந்த வகையிலும் உடன்பாடானவர்களோ பொறுப்பானவர்களோ அல்ல. இத் தீர்வு எழுவதற்கான அகப் புறக் காரணங்களை நாம் எண்ணிப் பார்த்தல் அவசியமாகும்.

1983ம் ஆண்டுக்குப் பின் ஒரு கோசத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தமானத்தில் வீரதீரச் செயல்களில் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டதே தமிழீழப் போராட்டமாகும். மக்களையும் அம் மக்களின் பாதுகாப்பையும் பொருட்படுத்தாது, விடுதலை இயக்கங்கள் தமது ஆயுத பலத்தை தம் பலவீனத்துக்கு மட்டும் பயன்படுத்தியதே முகாமையான காரணமாகும். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் நவீன ஆயுதங்கள் போராட்டத்தைத் தீர்மானிக்கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மைதான். இருப்பினும் அவ்வாயுதங்களை யாருக்கெதிராக நீட்டுகிறோம் என்பதில் தான் வெற்றி தங்கியுள்ளது. எமது போராட்டம் எதிரியை இனம் கண்டு அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் பலவீனப்படுத்துவதற்கு மாறாக எதிரியைப் பலப்படுத்தியுள்ளது, மக்களை அரசியல் மயப்படுத்தி ஆயுதத்தைத் தூக்க வைப்பதற்கு மாறாக மக்களை அரசியல் அனாதை ஆக்கியுள்ளது.

கண்ணாடி வீட்டில் இருந்து கல் எறிவதைப் போல் குடாநாட்டுக்குள் இருந்துகொண்டு பலத்தைக் காட்ட முயன்றது, அந்நிய தலையீட்டுக்கு வழி வகுக்கும் என்பதனை மட்டுமல்லாது ஏகாதிபத்தியங்களின் ஊடுருவலுக்கு வழிவகுக்கும் என்ற எமது எச்சரிக்கை துச்சமாக மதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான உயிர்த் தியாகங்கள், மக்களின் உழைப்புகள் அனைத்தும் பயனற்றதாகி விட்டது. தமிழர்களின் உரிமைக்காகப் போராடி சிங்கள மக்களை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக முழு இலங்கையையுமே சிக்கலுக்குட்படுத்தியுள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகளினதும் ஜே.ஆர் ஆட்சியினதும் இனவாத, பாசிச, சர்வாதிகாரப் போக்குகள் இன்றைய பிற்போக்கு நிலைக்குக் காரணமாக அமைந்து விட்டன. இந் நிலையில் இந்தியத் தலையீடு அமெரிக்க ஏகாதிபத்தியச் சுரண்டலையும், அரக்கத்தனங்களையும், இரசாயனப் போரையும் (          ) தவிர்த்துள்ளது என்பது ஆறுதலுக்கான ஒன்றாகும்.

இந்நிலையில் சரித்திரத்தில் இடம்பெற வேண்டியதாக ஒன்றை நாம் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

விடுதலைப்புலிகளின் சர்வாதிகாரப் போக்கு, மற்ற இயக்கங்களை அழித்தொழிக்கும் போக்கு, தமிழ் மக்களின் உரிமையைக் கொடுக்க மறுத்து தனது சர்வாதிகாரத்தை நிலை நாட்ட முற்பட்ட ஜே.ஆரின் ஆட்சிக் கூட்டு மொத்தமாக இலங்கையின் இறைமையைப் பாதித்துள்ளது. பாசிசத்தின் உச்சக் கட்டம் சரணாகதி. எனவே இரண்டு பாசிஸ்ட்டுக்களும் இணைந்து இலங்கையை அடகு வைக்கிறார்கள் என்பது சரித்திரத்தில் இடம்பெறப் போகும் உண்மையாகும்.

இந்நிலையில் எமது மக்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஏற்படுத்தாவிட்டாலும் ஏகாதிபத்தியத்தின் மரணப்பிடியில் இருந்து எமது மக்களையும் இலங்கையையும் காப்பாற்றப் போராடி தங்களைத் தியாகம் செய்த கழகப் போராளிகளுக்கும், ஏன் போராடுகிறோம் யாருடன் போராடுகிறோம் என்ற விளக்கமில்லாது போராடி தங்களை மாய்த்துக்கொண்ட புலிகள் ,ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கும் நாம் தலை தாழ்த்தி அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

ஜே.ஆரின் பாசிச சர்வாதிதாரத்தால் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கும் அஞ்சலி செய்கின்றோம்.

விடுதலைப் புலிகள், ஈரோஸ் ஆகிய அமைப்புகளின் பாசிச வெறியினால் பலியான மாற்று இயக்க விடுதலைப் போராளிகளுக்கும், அப்பாவித் தமிழ், சிங்கள மக்களுக்கும் அஞ்சலி செலுத்துகிறோம்.

இதே போல் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் கழகத்துடனும், கழகத்துக்குத் துணையாகவும் இருந்து உழைத்த அனைத்து மக்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது போராட்டத்துக்கு ஆதரவாகவும் உறுதுணையாகவும் இருந்து செயற்பட்டு வந்த அனைத்துத் தமிழ் மக்களுக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

இந்த நன்றி அறிவித்தலுடன் சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளுக்கும் அப்பால் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்துக்காக தொடர்ந்து போராடுவோம். இப் போராட்டத்துக்கான அமைப்புகளை புனரமைக்கும் அதே வேளையில் மக்களின் உடனடித் தேவைகளை உணர்ந்து புனர் வாழ்வு, புனரமைப்பு, பொருளாதார வளர்ச்சியிலும் உடனடியாக முன்னுரிமை கொடுத்து கழகத்தை ஈடுபடுத்துவோம்.

++++++++++++++++++++++++++++++++++++++++++

6. Juli 1992

(16.07.1992)

'மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி'

## செயலதிபர் தோழர்

# க.உமாமகேஸ்வரன் (முகுந்தன்)

தமிழீழ மக்களின்
உரிமைத் தலைவனை
தளராத உறுதி கொண்ட
கழகத்தின் செயலதிபரே!

எங்கள் இதயங்கள்
தேம்பி அழ
எழவேண்டும்
இக் கண்ணீர்
வரிகளை.........................

அன்னிய இராணுவத்தை
விரட்டியடிக்க
அடித்தளமிட்டாய்
ஐயோ.......... ஐயா!

தேசத்துரோகிகளின்
தேசத்துரோகம்
உங்கள் உடலை
குண்டு பாயச் செய்ததுவே




7. Juli 1992 ●●●⟶

www.tamilarangam.net

பெரியய்யா..........
உங்களது
வெறும் உடல்தான் அழிந்தது
ஆனால்,
நீங்கள் விட்டுச் சென்ற
கொள்கைகளும்
சிந்தனைகளும்
என்றுமே
அழியாதது...............

வெல்வோம் புரட்சி
தொடர்வோம்
உங்களது பாதையில்.





தோழர்,
புரட்சிக் கதிர் ஆசிரியர்
AGHA K.S.A.

## சொன்னாலும் வெட்கமடா!

'விடுதலைப்பாதை' இதழில் மாதம் ஒரு அரசியல் பிரமுகர்களை 'பேட்டி' கண்டு பிரசுரிப்பதென நாம் முடிவெடுத்து சில தமிழ் இயக்கப் பிரமுகர்களிடம் கேட்டுப் பல நாட்களாகியும் இன்னும் இவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். மக்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதிலளிக்கத் தயங்கும் இப் பிரமுகர்களை தேவையேற்படின் மக்களுக்குத் தெரியப்படுத்தத் தயங்கமாட்டோம்!

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *



# "மாதம் ஒரு பிரமுகர்"

'மாதம் ஒரு பிரமுகரின் பேட்டி' என்ற ரீதியில் இம்மாதம் 'விடுதலைப்பாதை' இதழுக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் (குமார் பொன்னம்பலம்) அவர்கள் அளித்த பேட்டி!

***கேள்வி:- இனப்பிரச்சினை பற்றி ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடைய தற்போதைய நிலைப்பாடு பற்றி என்ன கருத்தைக் கொண்டுள்ளீர்கள்?***

ஜனாதிபதி பிரேமதாசாவின் இனப்பிரச்சினை பற்றிய நிலைப்பாடு அவர் எப்போதும் வைத்திருந்த நிலைப்பாடேயாகும். அதாவது அவருக்கு தமிழர்களுடைய பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்பது தெரியாது அல்லது விருப்பமில்லை என்பதே.

அவர் பதவிக்கு வந்தபின்பு தமிழ் மக்கள் பிரச்சினையில் தமிழருக்கு என்ன உரிமை இருந்ததோ அதையும் படிப்படியாக இல்லாமல் செய்துள்ளார். உதாரணமாக வடக்கு-கிழக்கு மாகாணசபையை அவர் கலைத்ததன் மூலம் அப்பகுதிகளின் தமிழ் பேசும் மக்களது நிர்வாகம் இல்லாது போயிற்று. அத்துடன் 13வது திருத்தப் பிரேரணையின் கீழ் கிடைக்கப் பெற்ற அதிகாரங்களை அவர் இயங்க விடாமல் செய்திருக்கிறார். அத்துடன் சில அதிகாரங்களை வடக்கு, கிழக்கு மாகாணத்தவர், [illegible] மத்திய அரசாங்கத்தின் கீழ் தொடர்ந்தும் வைத்திருக்கிறார்.

அத்துடன் எல்லைப் பிரதேசங்களில் குறிப்பாக வவுனியா, திருகோணமலை, வெலிஓயா போன்ற இடங்களில் தமிழ் பேசும் நிர்வாகம் இல்லாததைச் சாட்டாக வைத்துக்கொண்டு அரசாங்கப் பணத்தில் ஆயிரக்கணக்கான பேரினவாத மக்களைக் குடியமர்த்திக் கொண்டிருக்கிறார். இதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கொண்டு வருவதற்கு தடங்கல்கள் கூடிக்கொண்டு வருகின்றன.

புலிகளுடன் 14 மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தினார். இன்று வரைக்கும் அந்தப் பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சினை சம்பந்தமாக கதைத்தார்களா? அப்படியெனின் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? புலிகள் என்ன கேட்டனர்? என்ற விபரங்கள் உலகத்துக்கோ குறிப்பாக தமிழ் மக்களுக்கோ பகிரங்கப்படுத்தாமை, நேர்மையற்ற அரசியல் என்றே நான் கருதுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலில் இரகசியத்துக்கோ நேர்மையற்ற நடவடிக்கைக-ளுக்கோ இடமில்லை.

இப்படியாக ஜனாதிபதியின் நடவடிக்கைகள் இருக்கும் போது புளொட் இயக்கத்தைச் சேர்ந்த என் அன்புக்குப் பாத்திரமான தம்பிமார் கேவலமாக அவரை நம்பி அவருடைய பாதங்களை இன்னமும் நம்பிக் கொண்டிருப்பதுதான் எனக்கு வேதனை தரும் விடயமாகும்.

*கேள்வி: தெரிவுக் குழு மூலம் இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு கிடைத்தல் சாத்தியமா?*

* தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என மனப் பூர்வமாக -அக்குழு உருவாக்கப்பட்ட போது -நம்பியவர்களில் நானும் ஒருவன். ஆனால் இன்று அப்படியான ஒரு தீர்வு வருமென நம்பத் தயாராக இல்லை.

என்னுடைய மனமாற்றத்திற்குக் காரணம் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் உருவாகிற்று. திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்கள் என்னைச் சந்தித்து ஏதோ இரண்டு சபைகள் இருக்க வேண்டும், அவற்றுக்கு மேலாக ஒரு மேற்பார்வைச் சபை இருக்கலாம், இந்த ஒழுங்குக்கு உங்கள் ஆதவு வேண்டும் என்று சொன்ன பொழுதும், அண்மைக் காலத்தில் ஜனாதிபதி தன்னுடைய கட்சி வடக்குக் கிழக்குக்கு எதிர், ஆனாலும் நீங்கள் தெரிவுக்குழுவில் ஒரு தீர்வைக் கொண்டு வாருங்கள் என்று கூறிய போதும், அதையடுத்து தெரிவுக்குழு ஒரு 'ஆலோசனைப் பத்திரத்தை' கையளித்த பொழுதும் தெரிவுக்குழு மூலமாக தமிழர்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வு கிடைக்காது என்ற உண்மையை உணர்ந்தேன். இனி

இந்த தெரிவுக்குழு நடவடிக்கையை எவ்வளவு சீக்கிரம் ஒரு முடிவுக்கு கொண்டுவர தமிழ்க் கட்சிகள் ஆர்வம் காட்டுகிறார்களோ அவ்வளவுக்கு, ஒன்றுமில்லாத நிலையிலும் தமிழர்களுக்கு ரோசம் இருக்கிறது என்பதை உலகுக்குக் காட்டக் கூடியதாக இருக்கும்.

வட்ட மேசை மகாநாடுகள், அனைத்துகட்சி மகாநாடுகள், அரசியற் கட்சி மகாநாடுகள் போன்றவற்றின் பாதையில் தெரிவுக்குழு அமர்வுகளும் போகத் தமிழ் கட்சிகள் தடையாக இருந்து தெரிவுக்குழுப் பாதையை ஜூலை மாதம் முடிவடைவதற்கு முன் முடிவடையச் செய்ய புளொட் இயக்கம் இருக்கவேண்டும் என்பதே என்னுடைய அவா.

*கேள்வி:-தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஜனாதிபதி பிரேமதாசா அவர்களின் அரசாங்க காலத்தில் கிடைக்கமுடியாதா?*

1 0. Juli 1992

* புலிகளை இராணுவத் தீர்வால் இந்த அரசாங்கத்தாலோ அதன் படைகளாலோ அழிக்க முடியாதுஎன்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். தமிழ் மக்கள் பலரும் இதே கருத்தைக் கொண்டுள்ளனர்.

அதே போல புலிகளை இராணுவத்தால் அடக்கினால் இந்த அரசாங்கமோ, வேறொரு அரசாங்கமோ தமிழ் மக்களுடன் கதைக்கவும் தயாராக இருக்க மாட்டார்கள் என்பதை அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் இயக்கங்களின் தம்பிமாரும், தனிப்பட்ட இலாபங்களுக்-காக ஜனாதிபதியைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் கேவலமான தனிநபர்களும் உணர வேண்டிய ஒரு விடயமாகும்

*கேள்வி:-தொடர்ச்சியாக தென்னிலங்கைக் கட்சிகளுடன் பல சுற்றுக்களில் பேசிவரும் தமிழ் கட்சிகளின் பேச்சுக்கள் எந்த வகையில் தீர்வு குறித்து முன்னேற்றம் கண்டுள்ளது?*

* தீர்வு குறித்து ஒரு முன்னேற்றம் கண்டுவிட்டோம் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு கட்சிகளுடனும் கதைத்த போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் கட்சிகளுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய கருத்துக்கள் என்று சொல்ல முடியும். ஆனால் இந்தக் கருத்துக்களை எவ்வளவுக்கு பகிரங்கப்படுத்த அக்கட்சிகள் தயாராக உள்ளன என்பது தான் பெரிய கேள்வி.

அக்கட்சிகள் எங்களுக்குத் தெரிவித்த கருத்தைப் பகிரங்கப்-படுத்தினால் தமிழர்களுக்கு அவை உதவக் கூடியதாகத்தான் இருக்கும்.

முன்பு நான் கூறியது போல அரசியல் நடவடிக்கைகள் மக்களுடைய உயிர்களையும், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலங்களையும் கொண்டுள்ள ஒரு விடயமாதலால் இரகசியத்திற்கோ நேர்மையற்ற நடவடிக்கைகளுக்கோ இடமில்லை. தமிழ்பேசும் மக்கள் பிரச்சினையில் கூட எல்லாவற்றையும் பகிரங்க மேடையில் வைத்து செயற்பட வேண்டும். அப்போது தான் நம்பிக்கை தரக்கூடிய ஒரு நிலையை நாம் உருவாக்கலாம்.

*கேள்வி:-வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்குரிய முறையான தீர்வு குறித்து தமிழ் கட்சிகளிடையே காணப்படும் முரண்பாடுகளையும் தாண்டி அவர்கள் உரிமைகள் உரிய முறையில் உறுதிப்படுத்தப்படும் என்கிறீர்களா?*

* முஸ்லிம் மக்களுடைய உரிமைகள் உரிய முறையில் உறுதிப்படுத்தப் படலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறேன். எதிர்காலத்தில் நடக்கக் கூடிய பேச்சுவார்த்தைகளில் நிலமைகள் மாறலாம் என்பதையும் உணர்கிறேன். தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு பயம் இருந்து வருகிறது.

1 1. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது என்னமவனில் தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லிம் கட்சிகளுக்குமிடையில் ஒரு உடன்படிக்கை வந்தாலும் கூட கடைசி நேரத்தில் அந்த உடன்படிக்கையை நொருக்குவதற்கு ஒரு பக்கத்தில் அரசும், இன்னொரு பக்கத்தில் பேரினவாத சக்திகளும், மற்றொரு பக்கத்தில் தமிழர்கள் மத்தியில் இருக்கும் சக்திகளும் தங்களுக்குரிய விதத்தில் செயற்படலாம். இவற்றை யாராலும் தடுக்க முடியாது. தூய உள்ளத்துடன் செயற்படுபவர்கள் தான் இப்படியான கஷ்டங்களை சமாளித்து ஒரு நேர்மையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர்களாக இருக்கலாம்.

( * முக்கிய குறிப்பு:- இப் 'பேட்டி' குறித்து உங்கள் கருத்துக்கள், விமர்சங்களை எழுத்து மூலம் அனுப்பி வைக்கவும். உங்கள் கருத்துக்கள் எதுவாக இருப்பினும் பிரசுரிப்போம். அதே சமயம் உங்கள் கருத்துக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் மீண்டும் இவரிடம் 'பேட்டி' காண்போம்!)

## கழகக் கண்மணிகளின் வரலாறு

* மண்ணுக்காய், மக்களுக்காய் மரணித்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) முன்னணித் தோழர்களாகிய சுந்தரம், இரா. வாசுதேவா, சோதீஸ்வரன் (கண்ணன்), மென்டிஸ், சுபாஷ், நடேசன், கந்தசாமி(சங்கிலி), கிருஷ்ணமூர்த்தி(காத்தான்), ஜெயச்சந்திரன், (பார்த்தன்), ஊர்மிளாதேவி, டாக்டர். இராசசுந்தரம் உட்பட பல கழகத் தோழர்களின் 'அரசியல் வாழ்க்கை வரலாறு' குறித்த சிறு குறிப்புகளை 'விடுதலைப் பாதை' இதழில் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளோம். ஆகவே நீங்கள் தெரிந்த, பழகிய கழகக் கண்மணிகள் குறித்த வரலாறைச் சுருக்கமாக எழுதி உடன் எமக்கு ('விடுதலைப் பாதை' யின் கவின் முகவரிக்கு ) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'ஆசிரியர் குழு'
'விடுதலைப் பாதை'

(1) பேசுவதற்கு முன்னர்— செவி கொடுங்கள்.
(2) எழுதுவதற்கு முன்னர்— சிந்தியுங்கள்.
(3) குறை கூறு முன்னர் —பொறுத்திருங்கள்.
(4) எதையும் கைவிடு முன்னர்— முயலுங்கள்.
(5) பிரார்த்தனைக்கு முன்னர்— மன்னியுங்கள்.
(6) மரணத்திற்கு முன்னர்— மற்றவர்களுக்கு உதவுங்கள்.

ஜெனிரா அமான்,
பெரிய கிண்ணியா,

12. Juli 1992

# மண்ணையும் மக்களையும் விற்று ஓர் அரசியலா?

எமது பாரம்பரிய பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும் அத்துமீறிய குடியேற்றங்களே தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையின் மூலகாரணங்களில் ஒன்றானது என்பது மறுக்கமுடியாதது.

எமது நிலங்கள் தொடர்ந்தும் பறிபோகாமலிருக்கவும், பறிபோன நிலங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் தமிழர்களாகிய நாம் நித்தமும் போராடிக்கொண்டிருக்கின்றோம். இருந்தும் சிங்கள அதிகாரிகள், அரசியல்வாதிகளை மிஞ்சும் விதத்தில் தமிழ் அரசியல்வாதிகள் காணிகளைப் பறித்தெடுக்கும் நடவடிக்கையில் செயற்படுவது துரோகத்தனமானது. இந்நாட்டின் ராஜாங்க கல்வி அமைச்சரும், வன்னி-பா-உறுப்பினருமான ராஜமனோகரியும் இதற்கு விதிவிலக்காகிவிடவில்லை.

வவுனியாவை அடுத்துள்ள தேக்கங்காடு கிராமத்தில் - 90% நிலங்கள் தமிழர்களுக்குரிய பகுதி - 1990 ஜூன் மாதத்தின்பின் தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு இவர்களது நிலங்களில் சிங்களவர்கள் அதிகளவில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இம் முயற்சிகள் சிலமாதங்களின் முன் அரசாங்க அதிபரினதும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரதும் கடுமையான எதிர்ப்புக்களினால் ஜனாதிபதி அவர்களின் பணிப்புரையின் பேரில் நிறுத்தப்பட்டு அக்கிராமத்தின் காணிகள் யாவும்-சுமார் 440 காணித்துண்டுகள்-அரசாங்க விடுதிகளும் தொழில் நிறுவனங்களும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

இதன் காரணமாக ஆத்திரமுற்ற சிங்கள மக்களையும், வவுனியா விகாரை தலைமைப் பிக்குவையும் திருப்திப்படுத்த முனைந்த ராஜமனோகரியின் சிபாரிசினால் அரசாங்க அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டதோடு தேக்கங்காட்டுப் பகுதியில் புளொட்டின் நடமாட்டமும் தடுக்கப்பட்டு அப்பகுதிக்காணிகளின் அபிவிருத்தி நேரடியாக மத்திய அரசின் காணி அமைச்சின் கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது தேக்கங்காடு பகுதியில் என்ன நடைபெறுகின்றது, எத்தனை சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றனர் என்பது புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலைமைகளுக்குக் காரணமாக அமைந்துவிட்ட திருமதி புலேந்திரன் அவர்கள் அடுத்த தேர்தலுக்கு நம்பியிருக்கக்கூடிய சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறும் சுயநல அரசியல் நோக்கத்திற்காக மக்களையும், மண்ணையும் விற்று அரசியல் நடாத்தாமல், வன்னித்தமிழரைக் காக்க வேண்டுமென்ற உயரிய நோக்குடன் வாழ்ந்த தனது கணவரின் பெயரைக் காப்பாற்றுவார் என நம்புவோம்.

13. Juli 1992

www.tamilarangam.net

# விழைவை நோக்கி வீறு நடையில்....

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் அதன் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் உழைக்கும் மக்களின் பேராதரவுடன் நடாத்திய மேதின விழாவானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக காணப்பட்டமை அரசியல் அவதானிகள் அனைவரையும் பிரமிக்கச்செய்துள்ளது.



குருமனகாட்டிலிருந்து வவுனியா நகரப்பகுதியை நோக்கி அலைஅலையாய் அணிஅணியாய்......

கடந்து விட்டகாலங்களில் சமூக, அரசியல், பொருளாதார ரீதியில் அடக்குமுறைக்குள்ளாகியிருந்த தமிழ் பேசும் மக்களின் உரிமை மீட்புக்கரன போராட்டம், காலத்திற்குக் காலம் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களால் நசுக்கப் பட்டதைத் தொடர்ந்து பல்வேறுபட்ட குணாம்சங்களைக் கொண்ட பல்வேறு விடுதலை அமைப்புகளால் தனிநாட்டுக் கோரிக்கையாக முன்னெடுக்கப் பட்ட போதிலும் அவை மக்கள் மயப்படுத்தப்படாமை காரணமாகவும் போராட்டத்தினை நகர்த்திச் செல்லும் வகையில் பலம் மிக்க வெகுஜன அமைப்புகளைத் தோற்றுவிக்காதமையினாலும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் மறைமுக, நேர்முக தலையீட்டினால் ஆக்கபூர்வமான செயற்திறன் எதுவுமற்ற, வெறுமனே



பயங்கரவாதப் போக்கினைக் கொண்ட சக்திகளை வளர்ச்சி பெறச்செய்தது. இதன் விளைவாக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையினைக் கருத்திற் கொண்டு வெகுஜன அமைப்புக்களினூடாக உணர்வு பூர்வமான ஒரு போராட்டத்தினை நோக்கி நகர்ந்து வந்த அமைப்புக்கள் சிதைக்கப்பட்டமையும் தமிழ் தேசிய இனத்தின் கடந்தகால கறைபடிந்த வரலாறுகள்.



மேதின மேடையில் கோ. நடேசபிள்ளை, கோ. கருணாகரன் பா.உ., ரி. விசுபாரதி, கரவை கந்தசாமி, டி. பி. பெரேரா, நந்தகுமார் (ஈரோஸ்)
பேச்சில்—கரவை கந்தசாமி

ஆயுதம் ஏந்திய பல்வேறு இளைஞர்குழுக்களும் மக்கள் யுத்தம், மக்கள் எழுச்சியென்று வெறும் வாய்ச்சவாடல்களை உதிர்த்து விட்டதோடு மட்டுமல்லாது நேரிய இலக்கினை மையமாகவைத்து மக்களை அணிதிரட்டுவதில் கோட்டை விட்டனர். ஒவ்வொரு விடுதலை அமைப்புகளும் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதில் போட்டி மனப்பாங்குடன் மக்களின் உணர்வுகளைப் பற்றியோ, அல்லது அவர்களின் தேவைகளைப்பற்றியோ சற்றேனும் கவனத்திற்கொள்ளாது கடந்தகாலங்களிலும் இது போன்ற பேரணிக்கும் விழாக்களுக்கும் மக்களை வலுக்கட்டாயமாக அணிதிரட்டுவதில் மட்டுமே வெற்றியீட்டியமை செல்லரித்துப் போன வரலாறுகள். ஆனால் இன்று கடந்தகாலங்களின் அர்த்தமற்ற போராட்டங்களும் இவற்றினால் ஏற்பட்ட இழப்புகளும், இழிவுகளும் மக்களை சிந்திக்கவைத்து தற்கால, எதிர்கால அரசியல் சூழ்நிலைகளை ஆய்வு செய்யும் உணர்வுகளுக்கு உயிரூட்டியுள்ளமை புதிய வரலாறுகள் என்றால் அது மிகையாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூக விடுதலை என்பது பெண்விடுதலையுடன் கூடியதே என பேரிகை முழக்கும் பெண்கள் படை.....

இதற்கு ஒரு மைல் கல்லாக அமைந்ததே வவுனியாமாவட்ட மக்களின் மேதினப்பேரணியாகும். இப் பேரணியானது ஆயுதக் கலாச்சாரத்தை அறவே வெறுத்து நிரந்தர அமைதிக்காகவும் ஐக்கியத்துக்காகவும் ஒலிக்கும் குரலாகவும், கடந்த கால யுத்த அழிவுகளிலிருந்தும், அனர்த்தங்களிலிருந்தும் மீளமுடியாது பரிதவிக்கும் ஏழை விவசாய, தொழிலாள, மக்களின் ஏக்கப் பெருமூச்சுக்களின் வெளிப்பாடாகவும், எதிர்வரும் காலங்களில் போரினைத்தவிர்த்து எதிர்கால சந்ததியினரின் கல்வியறிவைப் பெருக்குவதிலும், அழிந்து போகும் புத்திஜீவிகளின் கல்விச் சூழலைப் புனரமைப்பதிலும் அக்கறை கொண்ட ஆசிரியர், மாணவர்களின் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியதை அவதானிக்க முடிந்தது.

வரலாற்றைப் பிரமிக்க வைக்கும் வகையில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சுலோக அட்டைகளையும், விடிவைத் தேடும் கொடிகளையும் தாங்கிய வண்ணம் ஊர்வலமாக வீதி வழியே வந்த மக்கள்குழாம் கடந்த காலங்களின் கசப்பான வரலாறுகளை அழித்தெழுதிப் புதிய வரலாறு படைக்கப் புறப்படத்தயாராகின்றனர் என்பதைப் பறைசாற்றுகின்றது. வவுனியாவின் பலபாகங்களிலுமிருந்து வந்திருந்த விவசாய, தொழிலாள மக்களின் நனைந்த உடலும் ஈரஉடையும் அனைத்து, சமூக, மக்களினதும் அருவருப்புக்களை அணிகலனாகக் கொண்டு வெறித்தன அரசியல் நடாத்தும் வர்க்கத்தினரை நிச்சயம் நடுங்கவைக்கும் என்பது வியத்தகு விடயமாகும்.

இலங்கை வாழ் தமிழ், சிங்கள, முஸ்லீம் இன மக்களுக்கிடையிலான ஐக்கியத்தையும், பரஸ்பர நல்லுறவுகளையும் விரிவு படுத்திக் கொள்ளவும் கடந்த கால போர் அழிவுகளையும், சிதைவுகளையும் புனரமைத்து நாட்டின் பொருளாதரா வளங்களைச் செப்பனிடவும், தமது ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் மக்களின் உணர்வுகள் கூர்மையடைந்துள்ளது என்பதே நடந்து முடிந்த மேதினப் பேரணி மெய்ப்பித்துள்ளது.

1 6. Juli 1992

**"தெளிந்த சிந்தனை, துல்லிய நோக்கு, உறுதியான கொள்கைப் பற்று, முன்னேடிச் செயற்பாடு, கடின உழைப்பு, வெற்றியில் மயங்காமை, தோல்வியில் துவளாமை, கலங்கா உள்ளம், எதிரிகளை மதித்தல், சிக்கனம் போன்றவற்றின் ஒட்டுமொத்த தொகுப்புருவமே எமது கழகத்தின் ஸ்தாபகரும் செயலதிபருமான தோழர் உமாமகேஸ்வரன்!**

- தோழர் மாணிக்கதாசன் -

( தமிழீழ விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஸ்தாபகரும், செயலதிபரும், மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதியுமான தோழர் க.உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களின் மூன்றுவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழகத்தின் (புளொட்) மத்திய குழு உறுப்பினரும் இராணுவப் பிரிவுத் தலைவருமான தோழர் மாணிக்கதாசன் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரனை நினைவு கூருகிறுர்.)

சர்வதேச ஏகாதிபத்திய முட்கள் மத்தியில் இருக்கும் ரோசாப்பூபோன்ற தமிழீழத்தினைக் கசங்காது கிழியாது எடுக்கவேண்டுமேயானுல் நிதானம், விவேகம் போன்ற சாணக்கியம், தொலைநோக்கு என்பன முக்கியமாகக் கருத்திற் கொள்ளவேண்டும்; இவை போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்த வேண்டும்; அதை விடுத்து வறட்டுத் தனமான இராணுவ காரியங்களை மட்டும் நம்பி தமிழீழம், தமிழீழ உரிமைகளைப் பெறமுடியாது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு செயற்பட்டு வந்த கழக ஸ்தாபகரும், செயலதிபருமான தோழர் க.உமாமகேஸ்வரனுடன் நீண்ட காலம் பழகியவன் என்பதனுலும், சுகவீனமான காலங்களில், அஞாத்துவிதமான காலநிலைக்குள்ளும், கடினமான காலங்களிலும், களங்களிலும், கழகத்தில் நிர்வாகக் குழப்பம் ஏற்பட்ட காலங்களிலும் தோழர் உமாமகேஸ்வரனுடன் தோளோடு தோள் நின்றவன் என்பதனுலும் நான் அவரைப் பற்றித் ~~தெரியப்படுத்துவது மாத்திரமே அவரிற்குச் செய்யும் உண்மை~~ அஞ்சலியாக, மரியாதையாக கடமையாக எண்ணவில்லை; அவரிற்காகவும், அவரது கொள்கைகளிற்காகவும் நாம் மக்களுக்கு செய்யவேண்டியவை பல. அவை தொடர்ந்து வருங்காலங்களில் நிறைவேற்றிச் செல்வோம்.

" தெளிந்த சிந்தனை, துல்லிய நோக்கு, உறுதியான கொள்கைப் பற்று, முன்னேடிச் செயற்பாடு, கடின உழைப்பு, வெற்றியில் மயங்காமை, தோல்வியில் துவளாமை, கலங்காத உள்ளம், எதிரிகளை மதித்தல், சிக்கனம் போன்றவற்றின்

1 7. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒட்டுமொத்த தொகுப்புருவமே" எமது ஸ்தாபகரும் செயலதிபருமான தோழர் உமா. எமது பிரச்சினையில் நாமும், ஸ்ரீலங்கா அரசும் மட்டும் சம்பந்தப்படவில்லை என்றும் சர்வதேச ஏகாதிபத்திய வல்லரசுகளும், இந்து மா சமுத்திரத்தில் இலங்கையின் அமைவிடமும் சம்பந்தப்பட்டுள்ளதால் எமது பிரச்சினையில் ஏற்படக் கூடிய வெற்றி தோல்வி ஏகாதிபத்திய நாடுகளின் தென்கிழக்காசிய நாடுகளின் நலனை எவ்வளவு எவ்விதம் பாதிக்கும் என்பதனையும் நாம் தெளிவாக அறிந்து செயற்பட வேண்டும். இதில் உரிய கவனம் எடுப்பதே தமிழினத்துக்கு நாம் செய்யும் உயரிய மரியாதையாகும் என்பதில் உறுதியுடன் இருந்து செயற்பட்டு வந்தார். இதில் அக்கறை செலுத்தாது நாம் செயற்பட்டால் நாம் மக்களை ஏமாற்றுபவர்களாகவே இருப்போம் என்றும், எமது செயற்பாடுகள் , தியாகங்கள் உயிரிழப்புகள் எல்லாம் எமது பிரச்சினையில் தம் நலம் பேணுவோரே இதில் பயன் அடைவர் என்றும், எமது சொந்தக் காலில் நின்று சரியான முறையில் எமது போராட்டத்தை முன்னெடுத்து விடுவோமேயானால் இலங்கை அரசை விட இச்சக்திகளே எம்மை அழிக்க மும்மரமாகச் செயற்படுவார்கள். தமது நலன் பாதிப்படையக் கூடிய விதத்தில் எமது போராட்டம் முடிவடையப்போகிறது என்றாலும் இச்சக்திகள் வேசம் போட்டு செயற்படும் எனவும் கூறி, இதன் எதிரொலியே இந்திய - இலங்கை (Indo - Srilanka) ஒப்பந்தமாகும். இது இந்திய இலங்கை ஒப்பந்தமே தவிர, இலங்கை இந்திய ஒப்பந்தம் அல்ல. ஒப்பந்த விதிகளில் முக்கியமானவை பாழடைந்து போய் விட்ட தமது நட்பைப் புனருத்தாரணம் செய்து கொள்வதே ஆகும். இதற்குப் பிரதியுபகாரமாக வடகிழக்குப் பிரச்சினையை இந்தியா தீர்த்து வைக்கும் என்பதே முக்கிய விதி என்பதால் அது தமிழரின் உரிமையை வழங்காது என்றும், அதனை ஏற்க முடியாது என்றும் உறுதியுடன் இருந்து செயற்பட்டு வந்தார் செயலதிபர்.

தனது ஆழ்ந்த தெளிவான சிந்தனையால் ஏற்படுத்திக் கொண்ட கொள்கையில் என்றும் அவர் உறுதியாகவே இருந்து வந்தார். சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் முற்போக்கு சக்திகளை எமக்காதரவாகத் திரட்ட வேண்டும் என்பதிலும் சிங்கள அப்பாவி மக்கள் மீது எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது என்பதிலும் அவர் உறுதியாக இருந்து வந்தார். அனுராதபுரம், மதவாச்சிப் பகுதிக்குள் ஊடுருவி சிங்கள அப்பாவி மக்களை கொல்லும்படி சில நாட்டுப் புலனாய்வுத்துறையினர் ஆயுதங்களிற்காகப் பேரம் பேசிய போது அதை ஏற்க மறுத்ததும் அல்லாது அதே திட்டத்தை புலிகள் வெற்றிகரமாக நடத்தியதையும் கூட முதன்முதலில் வன்மையாகக் கண்டித்தார். அதைத் தொடர்ந்தும் தென்பகுதிக்குள் சென்று படமாளிகைக்குள் வெடிகுண்டு வைக்கும் படி அதே அயல்நாட்டுச் சக்திகள் கேட்டதற்கும் ஏற்க மறுத்திருந்தார்.

18. Juli 1992

எந்தவிதமான வேலைகளாக இருப்பினும் தானே முன்நின்று செயற்படுத்திக் காட்டி வந்ததினால் அதில் இருக்கக் கூடிய நடைமுறை ரீதியான சிக்கல்கள், கடினங்களை சாத்தியப்பாடாக் கூறுகளை நேரடியாக ஈடுபட்டு அறிந்திருப்பதால் அவ்வேலையை எவரும் கடினம், சாக்குப்போக்குகள் கூற முடியாத நிலை; செவ்வனே நிறைவேற்ற வேண்டிய நிலை ஏற்பட இவரே காரணமாக இருந்தார். எவ்வளவு கடின, தொடர்ச்சியான வேலைகளில் ஈடுபட்டு உறங்கிக்கொண்டிருந்தாலும், எந்நேரத்திலும் எதற்கும் செயற்பட வேண்டுமாக இருந்தாலும் உடனே செயற்படும் அதிசய ~~குணமிக்கவர். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போதும் ஒரு சிறிய~~ சத்தத்திற்கும் கண்விழிக்கும் விழிப்புத் தன்மை கொண்டவர் செயலதிபர் தோழர் உமா!

பெருமிதம் ஏற்படுத்தும் எந்தச் செயலையும் பெரிதுபடுத்தாது தனது கடமைகளை ஒழுங்குடனே செய்வார். வெற்றிக் களிப்பில் மயங்குவதோ, தோல்விக் - குழப்பங்கள் - பிரச்சினைகளைக் கண்டு கலங்குவதோ, பதட்டப்படுவதோ அவரிடம் கிடைக்காத குணமாகும். நாம் அதிசயப்படும் விதத்தில் அவரிடம் சிக்கனம் இருந்து வரும். செய்ய வேண்டிய இடத்தில் தேவைகளை நிறைவேற்றுவார். மேலதிக விரயங்கள் எதையும் செய்யமாட்டார். தன் சகாக்கள் சுகவீனமான நாட்களில் முக்கியமாக முன்னின்று தேவையான ஏற்பாடுகளைக் கவனிப்பார். தோழர்களுக்கு சுகவீனம் என்றால் தனது சிறு ஓய்வு நேரங்களிலும் அங்கு வந்து நிற்பார்.

நான் பெரியவருடன் முதன் முதலில் இறங்கிய களம் நாச்சிமார் கோவில் துப்பாக்கிப் பிரயோகம். இதிலும் ஆனைக்கோட்டைத் தாக்குதலிலும், கிளிநொச்சி வங்கித் தாக்குதலிலும், வட்டக்கச்சி விவசாயப் பண்ணை ஜீப் எடுத்தலிலும் "பெரியவரின்" துணிச்சல், வீரம், நிதான செயற்பாடு, அதேநேரம் புறச் சூழ்நிலை பற்றிய ஊகம் ஆகியவற்றில் திறமைகளைக் கண்டோம். செயல்கள், கதைகளைக் கேட்கும் போதே எமக்கு எங்கிருந்து துணிவு, மனத் தைரியம், விரைவு வருகிறது என்றே அறியாமல் 15 நிமிடத்தில் திட்டமிட்ட வேலைகளை 9 நிமிடத்தில் முடித்ததும் உண்டு. களங்களில் அவர் நகைச்சுவையுடனேயே செயற்படுவதால் அப்பழக்கம் எமக்கும் வந்து விடும்

எம்முடன் எமக்கேற்ற விதத்திலும், அரச அதிகாரிகளுடன் அவர்களிற்கேற்ற விதத்திலும் அனைவரிற்கேற்ற விதத்திலும் பழகும் தன்மை கொண்டவர் செயலதிபர். தமிழர் உரிமை பற்றிய சிந்தனையிலும் தமிழை வளர்ப்பது பற்றியுமே சிந்தித்து நிற்பார். இப்பேற்பட்ட தகுதி வாய்ந்த தலைவரை, மக்களின் தலைவராக வரக் கூடிய தகுதி பெற்ற தலைவரை இழந்து விட்டோம். அவரது இடம் நிரப்பப்பட முடியாவிட்டாலும் அவர் பணி தொடர்ந்து செய்வோம். மக்களின் விடுதலையை வென்றெடுப்போம்!

************************************

19. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தையும் தனயர்களும்

தமிழ்த் தேசிய இனத்தின் இழந்த உரிமைகளை மீட்டெடுக்க அகிம்சைவழியில் இறுதிவரை போராடி இயற்கை மரணமெய்திய தந்தை செல்வா அவர்களின் 15 வது ஆண்டு நினைவு தினத்தினை யொட்டி தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (P.L.O T.E.) அதன் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (D.P.L F.) ஆகியன வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடத்தில் கடந்த 27-04-1992 அன்று தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் வவுனியா மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திரு. விசுபாரதி அவர்களின் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் ஒன்றினை நடாத்தியது. இக் கூட்டத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் திரு. த. சித்தார்த்தன் பிரச்சாரச் செயலர் திரு. கிருபைராஜா ஆகியோர் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியாப் பகுதி முக்கியஸ்தர்களான திரு கேதீஸ்வரன், திரு. டேவிட் நாகநாதன் உட்பட பிற அரசியற் கட்சி உறுப்பினர்களும், மற்றும் வெகுஜன அமைப்புப் பிரதிகளும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இதே வேளையில் மீட்கப்பட்ட பிரதேசங்களில் சுதந்திரமாக செயற்படும் சூழ் நிலையிருந்தும்கூட கூட்டணியினர் தமது கட்சியின் வளர்ச்சிக்காகவும், தமிழினத்தின் நலனுக்காகவும் அயராது உழைத்து மறைந்துவிட்ட தேசியத்தலைவரை நினைவு கூரத் தவறியமை கூட்டணியினரின் சுயநலப் போக்கினையும், கோழைத் தனத்தையும் நிரூபிக்கின்றது. தமிழ்த்தேசிய இனத்தின் ஒடுக்கு முறைகளை உடைத்தெறிய தந்தை செல்வா அவர்கள் எவ்வாறு பாடுபட்டவரென்பதை அவரால் வளர்க்கப்பட்ட இன்றைய கூட்டணித் தலைவர்கள் உணரத்தவறியமை, தந்தை செல்வாவின் உயரிய இலட்சியங்களை மறந்து விட்டனரென்பதோடு, அவர்களது சந்தர்ப்ப வாத அரசியலைத் தோலுரித்துக் காட்டுகின்றது.

இதே கூட்டணியினர் தமது தலைவர்களான அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் போன்றோர் கொழும்பில்வைத்துப்படுகொலை செய்யப்பட்ட பின்னர் எந்தக் கட்டத்திலும் விடுதலைப்புலிகளே இதற்குக் காரணமென பகிரங்கமாக ஒப்புக்கொள்ளாத தன்மை இவர்களது கபடத்தனத்திற்குச் சான்றாகும்.

தந்தை செல்வாவின் நினைவு தினத்தை யொட்டி விடுதலைப் புலிகளும் அஞ்சலிக் கூட்டம் நடத்தி தந்தை செல்வா அவர்களை நினைவு கூர்ந்தமை வேடிக்கையானதே. தந்தை செல்வா அவர்கள் இன்று இருந்திருப்பாரேயானால் இதே புலிகளால் துரோக முத்திரை குத்தப்பட்டிருப்பாரென்பதைக் கடந்த கால வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன.

**20. Juli 1992**

சமூக, அரசியல், பொருளாதார, ரீதியில் விஞ்ஞான மாற்றத்தினை ஏற்படுத்தவும், தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையைப் பாதுகாக்கவும், ஒடுக்குமுறைகளுக்கெதிராக தந்தை செல்வா அவர்கள் உணர்வுகளின்பால் இளைய தலைமுறையினரை அணிதிரட்டியவர் என்பதை எந்த சக்திகளாயினும் சரி, எந்த அமைப்புக்களாயினும் சரி மறுப்பதற்கில்லை. எனவே தமக்குள் வேறுபட்ட மூல உபாயங்களையும், தந்திரோபாயங்களையும் கொண்டிருக்கும் அனைத்துத்தரப்பினரும், அவரது செயற்பாடுகளையும், தியாகங்களையும் நினைவு கூருவது கட்டாய கடமையாகும். இக்கூட்டத்தில் இராஜ குகனேஸ்வரன், (பா. உ.) அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## செயலதிபரின் வாழ்க்கை வரலாறு.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) ஸ்தாபகரும் செயலதிபரும் "மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதியுமான தோழர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களின் 'அரசியல் வாழ்க்கை வரலாறு ' குறித்து 'விடுதலைப் பாதை'யின் ஆரம்ப இதழ்களில் தொடர்ச்சியாக நாம் எழுதி வந்த போதும் '1978 ம் ஆண்டு முதல் செயலதிபர் மக்களுக்கு ஆற்றிய பல நற்காரியங்களை எழுதத்தவறி விட்டோம்' என பலரிடம் இருந்து ஆதாரங்களுடன் வந்த கண்டனங்களைத் தொடர்ந்து அத் தொடரை நிறுத்திக் கொண்டோம். விரைவில் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் அவர்கள் குறித்து ஓர் சிறு கை நூல் ஒன்றையோ அல்லது 'விடுதலைப்பாதை' இதழில் தொடர்ச்சியாக எழுதவோ இருக்கிறோம். ஆகவே நீங்கள் அறிந்த வகையில் தோழர் உமாமகேஸ்வரன் மக்களுக்கு ஆற்றிய சேவைகளை (முடிந்தால் ஆதாரங்களுடன்) எமக்கு உடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர் குழு
'விடுதலைப்பாதை'

● குத்துவிளக்கு

எல்லா இடத்திற்கும் ஒளி தரும் குத்து விளக்கு தனக்கடியில் நிழலோடிருக்கிறது. பிறருக்குதவும் பெரியோர் தமக்கென்று எதையும் செய்து கொள்ளவில்லை,

★

**21. Juli 1992**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வதந்தியால் வந்த உண்மை.

* யாழ்ப்பாணத்தில் புகையிலை மீதும் புலிகளின் வெப்பப் பார்வை விழுந்து விட்டதாம். புகையிலை உற்பத்தி சற்று செழிப்பாக இருப்பதாக கேள்விப்பட்ட புலிகள் விற்போரும் வாங்குவோரும் கட்டாயம் தரவேண்டும் கப்பமென்று "அன்போடு" வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளதால் புகையிலை உற்பத்தியாளர்கள் புகைக்கிறார்களாம்!

* * * * * * * * * * * * * * * * *

* புலிகளால் விழுங்கப்பட்ட தமிழர் அமைப்பொன்றின் தலைவருக்கு (ஸ்ரீசபா) கொழும்பில் சுவரொட்டிகள் போட்டிருந்தார்கள். வாழும் போது கொழும்புப் பக்கம் வரமுடியாதிருந்த தலைவருக்கு இப்போது கொழும்பில் மட்டும் தான் சுவரொட்டி போட முடிகிறது. அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, பகைவர்களும் இல்லை என்பதற்கு இது உதாரணம் தான். கொழும்பு மாறித்தான் போச்சு. ஆயினும் சுவரொட்டியில் ஒரு உறுத்தல் புலிகளால் விழுங்கப்பட்ட தலைவரை நினைவு கூரும் சுவரொட்டியில் வீர வேங்கை என்று வாசகங்கள் காணப்பட்டன. வேங்கைகளை வெறுத்த தலைவரை வீர வேங்கை என்று வர்ணிக்கலாமோ?

* * * * * * * * * * * * * * * * * * * * * *

அயல் நாட்டு உளவுப் பிரிவில் வேண்டிய ஆட்கள் பதவிக்கு வந்துள்ளதாக புலிகளின் ஆலோசகர் அண்மையில் பேட்டி கொடுத்திருந்தார். அவர் பேட்டி கொடுத்த பின் அயல் நாட்டில் புலிகளைத் தடை செய்து விட்டார்கள். அப்படியென்றால் வேண்டிய ஆட்கள் தானே தடை செய்துள்ளார்கள். பிறகேன் புலிகள் முகம் சிவந்து துரோகமென்று துள்ளிக் குதிக்கிறார்கள். விநோத வேங்கைகள் தான்!

* * * * * * * * * * * * * * * * * * *

* பாரிசிலுள்ள திலக வேங்கையார் நேபாளம் சென்று விட்டதாக கனடாவில் உள்ள பிளுமிப் பத்திரிகையில் செய்தி வெளியிட்டு இருந்தார்களாம். கப்பச் சேற்றில் மலர்ந்த அந்த (செந்தாமரை) பத்திரிகைக்குக் கூட தப்புச் செய்யும் நம் தலைவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் தெரியாதாக்கும். வேங்கைகள் யாரையும் நம்புவதில்லையாம். ரொம்ப ரகசியமானவர்கள். அது சரி; பிளுமிகளையும் நம்பக் கூடாதோ?

* * * * * * * * * * * * * * * * *

* தடை வராது என்று நம்பிக்கொண்டிருந்த வேங்கைகள் சிலரின் ஆதரவாளர்கள் சிலர் தடை வந்தவுடன் தலையிலடித்துக் கொண்டனராம். இதிலும் ஒரு வேடிக்கை உண்டு. அதென்ன? தூதரக விருந்துகளிலும் கலந்து கொண்டு வெளியே தெரியாமல் வேங்கைகளிற்கு "கூஜா" தூக்கும் ஓரிருவர் தடை வராது என அடித்துச் சொல்லிக் கொண்டிருந்தார்களாம். தடை வந்தவுடன் முகத்தை மெல்லத் துடைத்துக் கொண்டார்களாம். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பது போல் விசாவுக்கும் ஆசை, வேங்கைகளிடமிருந்து உயிரைக் காக்கவும் ஆசை. பாம்புக்கு தலை மீனுக்கு வால். கவலைக்கிடமான நிலை தான்!

* * * * * * * * * * * * * * * * * *

* கனடாவில் பச்சை இலக்கியம் குறித்த விவாதத்தில் வேங்கைகளின் பிளுமிப் பத்திரிகைகள் சில கச்சை கட்டிக் கொண்டு இறங்கியிருக்கின்றனவாம். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, விலங்கபிமானிகளுக்குத் திடீரென இலக்கிய அபிமானம் வரக் காரணம் என்ன? விசாரித்தோம். வேங்கைகளை மிருகமென்று சொல்வது வெட்கமாக இருக்கிறதாம். அர்த்தமுள்ள இந்து மதத்தை மறு பிரசுரம் செய்து வரும் அங்குள்ள பத்திரிகைக்கு மனிதரில் மிருகமுண்டு என்று கண்ணதாசன் சொன்னது மட்டும் எப்படி மறந்ததாம்?

* * * * * * * * * * * * * * * * * *

* புலிகளின் பிரதித் தலைவர் பெருங்கவலையோடு இருக்கிறாராம். அவர் பைல்களோடு பந்தாவாக இருப்பதைப் பொறுக்காத "தம்பி" ஆளனுப்பி அத்தனை பைல்களையும் அள்ளிக் கொண்டு வா என்று ஆணையிட்டு விட்டாராம். அந்தோ பரிதாபம். பிரதித் தலைவரிடம் ஆவணப் பிரதிகள் கூட நோ ஸ்ரொக். கையோடு இன்னொரு விடயம்; நிலைமைகள் விபரீதமாவதால் தம்பியின் வழமையான சந்தேகங்கள் சற்று அதிகரித்துள்ளதாம். இதனால் யாருக்கு வைக்கப்படுமோ பொட்டு என்று வேங்கைகளின் வட்டாரத்தில் சிலருக்கு வியர்க்கிறதாம். பல விடயங்களைத் தம்பி நேரடியாகவே கவனிக்கிறாராம்!

* * * * * * * * * * * * * * * * *

* யாழ்ப்பாண ஆலய வட்டாரங்களில் ஒரே அதிர்ச்சியாம். ஏனாம்? பிராமணர்கள் எதிரிகள் என்று "யோகி" முனியார் ஞானக் கண் கொண்டு கண்டுபிடித்துள்ளாராம். வெளியேற்ற உத்தரவு வரலாம் என்று ஆலய வட்டாரங்களில் அடர்த்தியான அதிர்ச்சி!

* * * * * * * * * * * * * * * *

* ஐரோப்பிய நாடொன்றில் நடைபெற்ற சர்வதேசப் பொலிசாரின் போதை வஸ்துத் தடுப்பு மாநாட்டில் நம்மூர்க்காரர் ஒருவர் வெளுத்து வாங்கியிருக்கிறாராம். அதுமட்டுமல்ல அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஐரோப்பியர் அல்லாதவர் அவர் மட்டுந்தானாம். யார் அவர்? நம் நாட்டு காவல் துறையில் ஒரு கலக்குக் கலக்கி விட்டு ஓய்வு பெற்ற திரு. சுந்தரலிங்கம் தானாம் அவர். இன்டர்போலில் வயதாகிப் போனாலும் சூடாறாத "சுந்தரனார்" மூளைக்கு மதிப்பு ஜாஸ்தி. சுந்தரனார் போன்றவர்கள் இப்படி நமக்குப் புகழ் தேடித் தந்துகொண்டிருக்க நம்மூர் வேங்கைகள் போதைவஸ்து விவகாரங்களில் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இன்டர்போல் லெவலில் போதைவஸ்து

22. Juli 1992

23. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் வேங்கைகளும் பிரசித்தம் தான். எப்படியோ வேங்கைகள் பேரைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்!

× × × × × × × × × × × × × × × × × ×

× கனடாவில் வேங்கைகள் குறிபார்த்துச் சுட்டதில் நம்மூர்க்காரர் ஒருவர் காயமின்றித் தப்பித்துக் கொண்ட விவகாரம் கனடிய காவல்த்துறையின் கவனத்துக்குச் சென்றுள்ளதாம். தடி, பொல்லு, கத்தி, என்ற லெவலில் இருந்து நம்மூர்ப்பாணியில் துப்பாக்கி வரை சென்றுள்ள புலிகளின் விவகாரம் கனடாவிலுள்ள இலங்கைத் தமிழரை கப்பலில் ஏற்றும் லெவலுக்குத்தான் கொண்டு செல்லுமோ தெரியவில்லை?

× × × × × × × × × × × × × × × × × ×

× யாழ்ப்பாணத்தில் சாமியாடி குறிசொல்லும் பெண் ஒருவர் மீது வேங்கைகளுக்கு வெப்பமான கோபம் வந்ததாம். குறி சொல்லும் போது தம்மைக் குறித்தும் ஏதாவது கூறுகிறாரோ என்று சந்தேகப்பட்ட வேங்கைகள் அந்தப் பெண்மணியை அழைத்து "அன்போடு" விபரமாக விசாரித்தார்களாம். வேங்கைகளே கலை வந்து ஆடும் போது வேறு யாரும் ஆடலாமோ?

× × × × × × × × × × × × × × × × ×

× யாழ். கூட்டுறவுச் சங்கத்தில் மீண்டும் ஒரு விலங்கபிமானி ஓடுற தண்ணியில, அண்ணை குடி தம்பி குடி. சற்று அதிகமாகவே குடித்து விட்டதால் விவகாரம் ஊருக்குள் விகாரமாகி விட்டதாம். முன்னுள் பிரபல விலங்கபிமானி கூட்டுறவுச் சங்கத்தை சுருட்டலுக்கான மொத்தக் குத்தகை எடுத்து அதிகமாய்க் கொழுத்துப் போனதால் ஊருக்குள் தெரிய வந்தது பழைய சங்கதி. வேறு வழியின்றி மகாராஜாவைப் பதவியிலிருந்து இறக்கிய வேங்கைகள் வேறு சில விலங்கபிமானிகளை பதவியில் போட்டார்கள். அவ்வாறு போடப்பட்டவர்களில் ஒருவர்தான் தற்போது ஊரறிய ஊழலில் சிக்கி உள்ளாராம். விலங்கபிமானி என்பதால் தண்டனை கிடையாதாம். பொறுப்பிலிருந்து மட்டும் சற்றுத் தள்ளி வைத்து விட்டார்களாம்!

× × × × × × × × × × × × × × × × ×

லண்டனில் இருந்து புறப்பட்டு வரும் "தமிழன்" வேங்கைகளுக்குப் பிடித்தமான தமிழனாகச் "சேட்டிபிக்கேட்" வாங்க ஒற்றைக் காலில் நிற்பதாகக் கேள்வி. "தமிழன்" என்று சொல்லிக் கொண்டு விலங்கபிமானத்தால் தலை குனிந்து நிற்பதோ? கொஞ்சம் யோசித்தால் நலம்!

× × × × × × × × × × × × × × × × ×

× உள்ளூரில் திரைப்படங்களுக்குத் தடை விதித்துள்ள வேங்கைகள் வெளிநாடுகளில் திரைப்படங்கள் மூலம் வரும்படி தேடும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள். கையோடு மெல்லிசை, தேனிசை என்று இந்தியப் பாடகர்களை வரவழைத்து மேலதிக வரும்படி தேடுகிறார்களாம்!

× × × × × × × × × × × × × × × × × ×

24. Juli 1992

× யாழ்ப்பாணத்தில் புலிகளின் ஆய்வு நிறுவனம் காடு வளர்க்கும் திட்டம் வகுத்து வருகிறதாம். வன்னிக் காடுகளுக்குத் தப்பிச் செல்வதை விட காடு ரொம்பப் பக்கத்தில் இருந்தால் வசதி என்று கருதித் தான் போட்டு இருக்கிறார்களாம் திட்டம். காடு கரம்பை மேடு திருத்தி களனிகள் ஆக்கினான் அந்தக் காலத்துத் தமிழன். அவன் இன்று பிறந்தால் யாழ்ப்பாணக் கோட்டையில் கல் உடைக்கத்தான் போகவேண்டும்!

× × × × × × × × × × × × × × × × ×

×புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பெற்றோருக்குச் செலவு கொஞ்சம் அதிகம் தான்! காரணமென்ன தெரியுமோ? பிள்ளைகள் எதைக் கேட்டாலும் பெற்றோர்கள் வாங்கிக் கொடுத்து விடுகிறார்களாம். எல்லாம் ஒரு நோக்கோடு தான். வாங்கிக் கொடுக்காவிட்டால் பிள்ளை புலிகளின் "பேபி பிரிகேட்டிற்குப்" போய் விடுமாம்!

× × × × × × × × × × × × × × × × ×

× தமிழ் நாட்டில் "செல்வியை" சாந்தப்படுத்த வேங்கைகள் தூது விட்டிருக்கிறார்களாம். இளைஞர் பேரவையிலிருந்து பின்னர் பிரபல வர்த்தகராக மாறிய "மதிமுகத்தாரைத்" தோதான ஆளாகத் தெரிவு செய்து தூதாக அனுப்பியுள்ளார்களாம். மதிமுகத்தார் முன்னர் யாழ்ப்பாணத்தில் எம்.ஜி.ஆர் மன்றமும் நடத்தியவர். மன்றம் நடத்திய கதையைச் சொல்லி வேங்கைகளுக்காக மன்றாடப் போயிருக்கிறாராக்கும். "செல்வி"யின் கட்சிக்காரர்களே "செல்வி"க்கு முன்னுள் எம்.ஜி.ஆரின் பெயரைச் சொல்ல யோசித்துக் கொண்டிருக்கும் போது பாவம் மதி முகத்தார் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்!

× × × × × × × × × × × × × × × × ×

யாழ்ப்பாணத்தில் பெண் வேங்கைகளுக்கு சிகையலங்கார மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். காரணம் என்னவாம்? அண்மையில் தெல்லிப்பளையில் படையினர் முன்னேற வீரத்தோடு வேகமாக பின்வாங்கிய இரண்டு பெண் வேங்கைகளுக்கு கூந்தல் சதி செய்து விட்டதாம். தப்பி ஓடும் போது கூந்தல் கொப்பில் மாட்டிக் கொண்டதால் கப்பென்று மாட்டிக் கொண்டார்களாம். விசயமறிந்த வேங்கைத் தலைமை; வெட்டு முடியை "பொவ்ற் கட்டாக" என்று மொட்டான கட்டளை பிறப்பித்துள்ளதாம்!

× × × × × × × × × × × × × × × × × ×

× தம்பியின் நம்பிக்கை பேபி சுப்பிரமணியத்தின் மீது (பேபிக்குத் தம்பியின் தமிழில் - இளங்குமரன்) விழுந்துள்ளதால் வேறுசில பிரமுக வேங்கைகள் மனங் கசந்து போயினவாம். கசந்தோர் பட்டியலில் தலைப்புப் பெயர் பாவம் மாத்தையாவினுடையதாம்.

× × × × × × × × × × × × × × × × × ×

நன்றி:-சூரியதீபன்
("தி" இலங்கை)

25. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ‘நிரந்தரமற்ற தீர்வுகள் எம்மை நிராயுதபாணியாவதற்கே நிர்ப்பந்திக்கும்.’

**செயலதிபர் தோழர் க. உமாமகேஸ்வரன் (முகுந்தன்)**

[ 1987 ல் ]

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று ஒரு முனைப்பான கால கட்டத்தில் இருக்கின்றது என்பதிலும் பார்க்க இக்கட்டான கால கட்டத்தில் இருந்து வருகின்றது என்பதே உண்மையாகும். சிறீலங்கா அரசு ஒருபுறம் பேச்சு வார்த்தை மூலம் தமிழர்களது பிரச்சனையைத் தீர்ப்பேன் என்று கூறிவருகின்ற போதிலும், மறுபுறத்தில் ஆயுதக் குவிப்பிலும், குறிப்பாகத் தெற்கு, மேற்குப் பிராந்தியங்களை ஏகபோக முதலாளிகட்கு விற்றுக்கொண்டும் இருக்கின்றது. இந்த ஏகபோக ஊடுருவலானது முழுமையான ஏகாதிபத்தியசக்திகளின் பிடிக்குள்ளே இலங்கை மக்களைக் கொண்டு செல்வதற்கு வழி வகுக்கலாம். அந்த அடிப்படையில் இன்று இருக்கக்கூடிய மக்களின் குழப்பமான நிலையைத் தெளிவு படுத்தவேண்டியது எமது தலையாய கடமையாகும்

மேலும் பேச்சு வார்த்தை என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஒன்றும் புதிதானதாக இல்லை. 1949 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே தமிழ்மக்கள் தமது உரிமைகளைப்பெறுவதற்கான போராட்டத்தில் இறங்கி விட்டனர். அவர்களது அன்றைய அஹிம்சைப்போராட்ட கால கட்டத்தில்கூட இனவாதச் சிறீலங்கா அரசானது தமிழ்த் தலைவர்களைப் பேச்சு வார்த்தை என்று அழைத்து ஏமாற்றிய வரலாறுகள் தமிழ் மக்கள் மனத்தில் இன்னமும் ஆழப் பதிந்த தொன்றாகும். இன்று தமிழ்மக்களின் விடிவிற்கு ஒரு தீர்வு தமிழீழமே எனும் நிலையில் ஆயுதம் தரித்தவாறு நமது விடுதலையை வேண்டிப் போராடிக் கொண்டிருக்கும் காலத்திலும் இவ்வரசானது தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை நடத்திக்கொண்டு இருக்கின்றது. அதில் குறிப்பாகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட 1983 யூலைக் கலவர இரத்தக் கறைகள் காய்வதற்கு முன்பாகவே தமிழர் விடுதலைக்கூட்டணியினரை வட்டமேசை மாநாட்டிற்கு அழைத்த சிறீலங்கா அரசு தனது வழமையான பாணியில் தமிழ் மக்களின் உரிமைகளை நிராகரித்தது. இதன்மூலம் தமிழ் மக்களின் பிரச்சனையில் ஒரு நடுநிலைமையாளராகச் செயல்பட முனைந்த இந்திய அரசின் பங்

26. Juli 1992

களிப்பையும் வெறுத்து ஒதுக்கியமை வெளிப்படலாயிற்று.

அதனைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலை வரலாறானது பலவிதமான மாற்றங்களைப் பெற்று வந்தது. அதில் குறிப்பாக ஆயுதம் தரித்த நிலையில் அன்றிலிருந்து இடம்பெற்று வந்த போராட்டமானது சிறீலங்கா அரசை வலுப்படுத்தும் வகையிலும் மாறியதுடன் திட்டமிடப்படாத நிலையில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்ட இப் போராட்டத்தில் ஈடுபட்ட பலரின் நடவடிக்கைகள் இனவாதக்கண் கொண்டதாகவும் இருந்து வந்தது

இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சிறீலங்கா அரசு ஒட்டுமொத்த தமிழ்ப் போராளிக் குழுக்களையும் பயங்கரவாதிகள் என உலகிற்குப் பிரசாரம் செய்தது. ஆயினும் இவற்றையும் மீறிக் குறித்த சிலரது சரியான நிலைப்பாடுடனான போராட்டம், அதிலும் குறிப்பாகச் சிங்கள மக்கள் எமக்கு எதிரியில்லை என்பதுபோன்ற உலகளாவிய பிரச்சாரம் மற்றும் நடைமுறையானது சிறீலங்கா அரசிற்கு விடுதலை இயக்கங்களை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டது

கடந்த வருடம் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் இந்த நிகழ்ச்சிப் போக்கை உறுதி செய்வதாகின்றது. ஆயினும் அன்று இருந்த சூழ்நிலையும், பேச்சு வார்த்தைக் காலப் பகுதியில் சிறீலங்கா அரசுப் படைகள் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடாத்தி யுத்த நிறுத்தத்தை மீறிய செய்கையும் வழமைபோலவே சமாதானத்தைச் சாத்தியமற்றதாக்கியது

இந்த நிலையில் தொடர்ந்தும் இந்திய அரசின் தீவிர முயற்சியால் புதிய பேச்சு வார்த்தைகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சிறீலங்கா அரசினரும் நடத்தினர். அதனைத் தொடர்ந்து சிறீலங்கா அரசு புதிய நகல்த் திட்டத் தின்படி வழங்கப்படவுள்ள அதிகாரப் பங்கீடு இந்தியாவில் வழக்கில் உள்ள அதிகார பங்கீட்டை ஒத்தது என்றும், பண்டா செல்வா மற்றும் டட்லி செல்வா ஒப்பந்தத்தை ஒத்தது போன்றும் இருப்பதாகவும் பல அறிஞர்களும், தலைவர்களும் மற்றும் இந்திய அரசினரும் கூறியிருக்கின்றனர்

இவ்வகைக் கூற்றுக்கள் எம் மக்கள் மத்தியில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளன. அதாவது இந்திய அரசின் நடுநிலையின் கீழ் இவர்கள் இந்தியாவில் உள்ளதைவிட கூடிய அதிகாரத்தைப்பெற முயல்வது தகுமா? என்ற கேள்வி எம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது நியாயமானதே! இவற்றைத் தீர்த்து வைக்க வேண்டியது எமதுகடமைப்பாடாகும். அந்த வகையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் (முகுந்தன்) அவர்களைச்சந்தித்த போது, அவர்களால் கூறப்பட்ட கருத்துக்களை இங்கு எமது வாசகர்கட்குத் தருகின்றோம்

## தோழர் முகுந்தனின் கருத்துக்கள்

கடந்தகாலப் பேச்சு வார்த்தைகள் கடந்தகாலத்தில் பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்ட தமிழரசுக்கட்சி போன்ற கட்

27. Juli 1992

www.tamilarangam.net

சிகளால் முன்னெடுக்கப்பட்டன. இவர்கள் தமது உரிமைக்கான போராட்டத்தினை அகிம்சை வழிமுறையில் முன்னெடுத்து வந்தனர். இப்போராட்டம் உச்சகட்டத்தை அடையும் போது அரசானது தமிழ்த் தலைவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது. அரசினது இந்த நடவடிக்கை போராட்டத்தை பின்தள்ளியது என்பதே உண்மையாகும்

பேச்சு வார்த்தைகளின் போது தமிழ்த் தலைவர்கள் தமது கோரிக்கைகளை விட்டு வெகுவாகக் கீழிறங்கியே வந்துள்ளார்கள். அந்த வகையில் இவர்கள் அரசுடன் சில குறைந்தபட்ச ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு அவற்றில் கைச்சாந்திட்டனர். ஆனால் இனவாத அரசானது அந்த ஒப்பந்தங்களை கிழித்தெறியும் சூழலை உருவாக்கிச் செல்லுபடியற்றதாக ஆக்கியது. இதற்கு அவர்கள் கூறிய காரணங்கள் மிகவும் வேடிக்கையாகவும் விசித்திரமானதாகவும் இருந்து வந்துள்ளது. அதாவது ஒரு கட்சி அரசபீடத்தில் இருக்கும் போது எதிர்க்கட்சியினர் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தால் அதை நிறைவேற்ற முடியாது போய்விட்டது என்று காரணம் கூறி வந்துள்ளனர். அதே கட்சி எதிர்க் கட்சியாக இருந்தபோது முன்னர் எதிர்க் கட்சியாக இருந்த தற்போதைய ஆளுங் கட்சியும் தமிழ்த் தலைவர்களுடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தம் நடைமுறைபடுத்தப்படாததற்குக் காரணமும் எதிர்க் கட்சியே எனக் கூறியுள்ளது.

இவ்வாறாக ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கக் கூடாது என்ற தமது நிலையில் உறுதியாக இருந்து வந்துள்ளனர் என்பதுதான் இவற்றிலிருந்து நாம் அறியக் கூடியதாக உள்ளது. இதில் குறிப்பாக எம்மிடையே இருந்து வந்த பலவீனமும் பாரிய பங்காற்றுகின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இந்த விதமாக சிறீலங்கா அரசினால் பலமுறை ஏமாற்றப் பட்ட பின்னர் தான் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கை இழந்து எமது போராட்ட வடிவத்தையே மாற்றி செயல் பட ஆரம்பித்தோம்

ஆயினும் தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் புதிய ஒரு நடுநிலையாளராக இந்திய அரசு செயற்பட ஆரம்பித்துள்ளது. அந்த வகையில்தான் மூன்றாம் (3ஆம்) நாடான இந்தியஅரசின் முயற்சிக்குத் தடையாக இருக்கக் கூடாது என்ற வகையில் நாம் ஆரம்பத்தில் திம்புபேச்சுவார்த்தைக்குச் செல்வதற்குச்சம்மதித்தோம்

இதனமூலம் நாம் இரு முக்கியமான பெறுபேறுகளைப்பெற முடியும் என்ற கருத்தைக் கொண்டிருந்தோம். முதலாவதாக இந்தப் பேச்சுவார்த்தையிலும் சிறீலங்கா அரசு எமது பிரச்சனையைத்தீர்த்து வைக்காது என்பதை உறுதியாக அறிந்திருந்தோம். அந்த வகையில் சிறீலங்கா அரசினரது போலி வேடத்தை இந்திய அரசின் முன்னிலையில் சர்வதேச அரங்கிற்கு எடுத்துக் காட்டுவதற்கு ஒரு கருவியாகவும் இப்பேச்சுவார்த்தையை நாம் பயன்படுத்தத் தீர்மானித்தோம். அதில் பெருமளவு வெற்றியும் பெற்றோம்

மேலும் முதன்முதலாக தமிழீழ விடுதலைக்கு ஆயுதரீதியாகப் போராடிக் கொண்டிருக்கும் எம்முடன் சிறீலங்காஅரசு பேசுவதற்குச் சம்மதித்திருந்

2 8. Juli 1992

தது. இது எமது போராட்ட வரலாற்றில் ஓர் திருப்புமுனையாகும். இதன் மூலம் நாம் சர்வதேச அரங்கில் அங்கீகாரம் பெற்றவர்களாகக் கூடிய சூழ்நிலை உருவாகியது. இந்தச் சூழ்நிலையையும் நாம் எமக்குச் சாதகமாகப்பயன்படுத்துவதற்குத் தீர்மானித்தோம்.

அதேவேளை பேச்சு வார்த்தைக்காலத்தில், அதாவதுஅரசுயுத்த நிறுத்தகாலப் பகுதியில் சிறீலங்கா ஆயுதங்களை வெளிநாடுகளிலிருந்து சேகரித்தும், தமிழ் மக்கள் மீது காரணமில்லாத தாக்குதல்களை நடாத்தியும் தனது துரோக்கத் தனத்தை வெளிக் காட்டியது. அந்த அத்து மீறிய சம்பவங்களுடன் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தையானது முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து பல தோழர்களதும், அப்பாவித் தமிழ் மக்களதும் இழப்புக்களின் பின்னர் சிறிலங்கா அரசானது புதிய நகலப் பிரேரணைகளுடன் சமரச பேச்சு வார்த்தைக்கு இந்திய அரசினூடாகத் தமிழீழப் போராளிகளை அணுகியுள்ளது. தற்போதைய இந்த நகல் குறித்த திட்டத்தில் கூறப்பட்டுள்ள விடயங்க்ள் அனைத்தும் தற்பொழுது இருந்து வரும் சிறீலங்காவின் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பின்கீழ் உள்ள அதிகாரப் பங்கீடாக உள்ளது. அதாவது இது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல்ப் பிரச்சனையைத் தீர்க்காத நகல்களாக இருக்கின்றது. இந்த நகல்த் திட்டமானது வடக்கு, கிழக்கு தொடர்பான சில மேலோட்ட மான கருத்துக்களையே கொண்டதாக உள்ளது. மேலும் கிழக்கு மாகாணம் தொடர்பாக ஒரு தெளிவற்ற நிலையும் இங்கு காணப்படுகின்றது.

இந்திய அரசும் மற்றும் அறிஞர்களும் இந்த நகல்திட்டம் நியாயமானது என்றும் இது இந்தியாவில் அமைந்துள்ளது போன்ற அதிகாரப் பங்கீட்டைக்கொண்டது என்றும் கூறுவதை நாம் கடுமையான விமர்சனத்துடன் மறுக்கின்றோம்.

இந்திய நாட்டின் அதிகாரப் பங்கீடானது அந்த நாட்டின் ஆட்சி அமைப்பிற்கு உட்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆட்சியமைப்பு மற்றும் அரசியல் அமைப்பு என்பன இலங்கையில் ஆட்சி மற்றும் அரசியல் அமைப்புடன் முற்றாக மாறுபட்ட தொன்றாக இருக்கின்றது

இந்தியா ஒரு பல தேசிய இனங்களைக்கொண்ட நாடாகும். இங்கு பாராளுமன்றம், நீதித்துறை மற்றும் அரசியல் அமைப்பு ஆகிய மூன்றும் ஒன்றை யொன்று கண்காணித்து சமன்செய்யும்வகையில் அமைந்துள்ளது. இது சிறுபான்மை தேசியத்திற்குரிய உரிமைகளை குறைந்த பட்சம் ஏற்றுக் கொள்கின்றது. மேலும் இங்கு குடியரசுத் தலைவருக்கு (ஜனாதிபதிக்கு) தனிப்பட்ட அதிகாரமேதும் இல்லை. அதே நேரம் அப்பதவிக்கு எந்த ஒருதேசிய இனத்தவரும் வருவதற்குரிய சாத்தியக் கூறுகளும் காணப்படுகின்றது

ஆனால், இலங்கையில் நில்மை மிகவும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இங்கு அரசியல் அமைப்பும் பாராளுமன்றமும் ஒன்றை யொன்று சமர் செய்யமுடியாத துர்பாக்கிய நிலை காணப்படுகின்றது. அதாவது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினால் அரசியல் அமைப்பையே மாற்றிவிட முடியும். மேலும் அனைத்திற்

2 9. Juli 1992

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் மேலாக குடியரசுத் தலைவரின் அதிகாரம் இருக்கின்றது. அதாவது பாராளுமன்றத்தைத் கலைக்கவோ உயர்நீதிமன்ற முடிவுகளைத் தட்டிக் கழிக்கவோ குடியரசுத்தலைவர் அதிகாரம்பெற்றவராகின்றார். அதுவே முழு ஆழுமை பெற்றவராகவும் அவரை கட்டுப்படுத்தும் சக்தி எவரிற்கும் அற்ற நிலையும் அங்கு காணப்படுகின்றது. ஆகவே அரசியல் அமைப்பு, பாராளுமன்றம்,நீதிமன்றம் ஆகியவற்றை மாற்ற, கலைக்க அல்லது மீற, குடியரசுத்தலைவரால் முடியும்.

அதேவேளை இலங்கை இரு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாகும். அதிலும் சிங்கள இனமானது 70% கொண்ட ஒரு பெரும்பான்மையாக விளங்குகின்றது. அங்கு நிலவும் இனவாத அலையின் காரணமாக எந்த ஒரு தமிழரும் குடியரசுத் தலைவராகும் வாய்ப்பற்றுப் போகின்றது. ஆகவே அங்கு வரக்கூடிய குடியரசுத் தலைவர் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க முடியாத அளவிற்கும் பெரும்பான்மையைச் சார்ந்து காணப்படுவர். அதனை வலுப்படுத்துவது போன்று சிறுபான்மையினரின் பாதுகாப்புக் குறித்து இந்த நகல்த் திட்டம் எந்தக் கருத்தையும் முன்வைக்க வில்லை. ஆகவே இது தமிழீழ மக்களின் அடிப்படைப் பிரச்சனையை எந்த வகையிலும் தீர்த்து வைக்காது

இலங்கையின் முழுமையான அரசியல் தீர்வை முன்வைப்பதானால் இன்றைய இலங்கையில் அரசியல் வடிவமைப்பு முற்றாக மாற்றப்பட வேண்டும். இது இல்லாது அரசியல்தீர்வையும் நாம் எதிர்பார்க்க முடியாது. மேலும் இன்று எமது போராட்டமானது சுயநிர்ணை யின உரிமைக்கான போராட்டமே ஆகும். இது ஓர் வர்க்கப் போராட்டமாக இல்லாத காரணத்தினால் அது ஒரு அரசியல் தீர்வில் முடியுறலாம் என்பதினை நாம் மறுக்கவில்லை. அதேவேளை இப்புதியநகல்த்திட்டம் பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தம் போன்றிருப்பதாக கூறப்பட்டிருப்பதையிட்டும் நாம் எமது மறுப்பைத் தெரிவிக்கின்றோம்

அதாவது அன்றைய நிலையானது மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக அகிம்சை வழியில்போராடி வந்த காலத்தில் இடம் பெற்ற தொன்றாகும். மேலும் அது கூட்டாட்சி அரசின் கீழ் (சமஷ்டி) பிரச்சனையைத்தீர்ப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். அது பிரிவதற்கான ஒரு போராட்டமன்று. அந்த நிலையில் அந்த ஒப்பந்தமானது கிட்டத்தட்ட தற்காலிகமாக ஏற்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் இன்று பல இழப்புக்கள் மத்தியில் தமிழ் மக்களிற்கு அவர்களது சுயாட்சிப் பிரதேசங்களை உள்ளடக்கிய தனி நாடே தீர்வாகும் எனும் முடிவு பெறப்பட்டுள்ளது.

அதேவேளை அன்று ஏற்பட்ட ஒப்பந்தங்களால் ஏற்பட்ட பாதிப்புகளை நாம் ஆராய வேண்டியவர்களாக உள்ளோம். ஒப்பந்தம் கைச்சாந்திடப்பட்ட காலப்பகுதியானது போராட்டம் உக்கிரமடைந்த காலப்பகுதியாகவே இருந்து வந்துள்ளது. போராட்டத்தில் பாரிய மக்கள் சக்தி பங்கு கொண்டு அரசை கதிகலங்க வைத்த காலமது. தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகங்

3 0. Juli 1992

களை மேற்கொள்ள முடியாத நிலைக்கு அரசு தள்ளப் பட்டது. அந்த நிலைமைகளை ஏற்று நடத்தும் அளவிற்கு தமிழ்த் தலைமையும் முன்வந்து விட்டது. இந்த காலங்களிற்கு உதாரணமாக மிக முக்கிய இரு ஒப்பந்தங்களில் கைச்சாந்திடுவதற்கு முன்னைய காலப்பகுதியான 1957 மற்றும் 1965 காலப்பகுதிகளைக் குறிப்பிடலாம்.

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் இடம் பெற்றுவந்த போராட்டத்தில் 90% திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் சத்தியாகிரகம் மற்றும் ஏனைய போராட்டத்தில் குதித்திருந்தனர். அதே போன்று திருகோணமலைத் துறைமுகம் கூட அந்தக் காலப் பகுதியில் தமிழர்களது கையிலேயே இருந்தது. இதனை அரசிற்கு வழங்கும் அளவிற்கு இறங்கி வந்தே தமிழ்த் தலைவர்கள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

ஆனால் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து வந்த ஒப்பந்தங்கள் மூலம் பல இன்னல்கட்கு மத்தியில் திரட் டப்பட்டிருந்த பாரிய மக்கள் சக்தி சிதறடிக்கப்பட்டது. ஸ்தாபனத் தன்மை இல்லாதொழிக்கப்பட்டது. அன்று இடம் பெற்று வந்தது அகிம்சைப் போராட்டமாக இருந்ததால் அதனது பாதிப்புகள் பாரியதாக இருக்கவில்லை. ஆனால் இன்றைய நிலைமை வேறு.

இன்றைய போராட்டம் அரசிற்கெதிரான ஆயுதம் தரித்த போராட்டமாகும். ஆகவே இன்று மூன்றாம் (3ஆம்) நாட்டின் நடுநிலைமையில் ஏற்படக் கூடிய ஒப்பந்தங்களின் பின் நாம் எமது ஆயுதங்களை அரசிடம் கையளிக்க வேண்டியவர்களாயுள்ளோம். ஆனால் அடுத்த கணமே மீண்டும் எதிர்கட்சியினரைக் காரணங்காட்டி அரசானது எம்முடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மிக இலகுவாக கிழித்தெறியும். அதற்கிடையில் வழமைபோல் பாரிய இனக்கலவரத்தை மீண்டும் ஆரம்பிக்கவும் இனவாத அரசு ஒருபோதும் தயங்காது எனலாம். அதேவேளை அங்கு நாம் அனைவரும் நிராயுதபாணிகளாகவே இருப்போம்.

மேலும் எமது போராட்டத் தன்மை குறித்தும் நாம் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகின்றது. ஒட்டு மொத்தமாக்க் குறிப்பிட்டால் எமது போராட்ட வழிமுறைகள் சரியானதாக இல்லை. தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கி வந்த சக்திகளின் போராட்ட முறைகள் பேச்சு வார்த்தைகளுக்கு அழைப்பதாகவே இருந்து வந்துள்ளது. இதனையே நாம் ஆரம்ப காலத்திலேயே விமர்சித்து, எமது போராட்டம் மக்களைச் சார்ந்த நிலையில் எல்லைப்புறப் பாதுகாப்புப் போராட்டமாக அமைய வேண்டும் என்று கூறி வந்தோம்.

ஆனால் அவைகுறித்து எந்த விதமான சிரத்தையும் கொள்ளாது நடாத்தி வந்த போராட்டம் இன்று பேச்சுவார்த்தைக்கு நிர்பந்திக்கும் அளவிற்கு பல வீன நிலைக்கு எம்மை இட்டுச் சென்றுள்ளது. ஆகவே இன்று நாம் செய்யக் கூடியது ஒன்றாகவே இருக்கமுடியும். அதாவது, உடனடி யாக ஓர் ஐக்கிய முன்னணியை அமைத்து நகல்த்திட்டம் குறித்தும், கடந்தகால நிகழ்ச்சிகள் குறித்தும் ஒருமித்த குரலில் உலக நாடுகட்கு நாம் எடுத்துரைக்க வேண்டும்.

3 1. Juli 1992

www.tamilarangam.net

மேலும் நாம் எமக்கென ஓர் திட்டமிட்ட இராணுவத் திட்டத்தை உருவாக்கி எமது போராட்டத்தை வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இதுவே நாம் என்றும் உறுதியாகக் கூறி வந்தது மாகும்.

மேலும்இறுதியாக அனைத்து இயக்கங்களும், மீண்டும் கூறுவது ஒவ்வோர் இயக்கமும் தமக்கு தனிப்பட்ட முறையில் பிற சக்திகளின் ஆதரவும் உதவியும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணப் பாட்டுடன் தமது செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தால் அது எமது ஒட்டுமொத்தப்போராட்டத்தையும் அழிக்கும் நிலையையே உருவாக்கும். இதனைக் கருத்திற் கொண்டு நாம் ஒவ்வொருவரும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டும் என்பதே எமது அறைகூவலாகும். ★



[illegible] ஒரு மாதங்களுக்கு முன் கண்களை [illegible] ஒரு கையையும் கைவிரல்களையும் இழந்து விட்ட இராணுவ கோப்ரல் ரூபட்ன கபுகேயின் திருமணப் படம் இது. நேற்று முன்தினம் களுத்துறை கட்டுக் குருந்தையில் நடைபெற்ற திருமண வைபவத்தில் இந்தப் படம் பிடிக்கப்பட்டது. 23 வயதான இந்த இராணுவ வீரனிடம் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே தன் இதயத்தைப் பறிகொடுத்த ஜானகி டீ சில்வா தன் இதயம் கவர்ந்தவன் கபோதி [illegible] விட்டானென்று கவலைப்படவில்லை, [illegible] மாறவுமில்லை. 'வாழ்ந்தால் அது உன்னோடுதான்' என்று அவள் நெஞ்சில் கொண்ட வைராக்கியம் வார்த்தைகளால் வடிக்கப்பட முடியாதது. தன் காதலனின் — கணவனின் ஒரேயொரு கை விரலில் அவள் கலியாண மோதிரத்தை அணிவித்தபோது கூடியிருந்தவர்கள் மனம் நெக்குருகிப் போனார்கள். கூழாங்கையின் உதவியுடன் ஒற்றை விரலால் அவளுக்கு அவன் திருமண கேக் ஊட்டுவதைப் படம் காட்டுகிறது. திருமண அத்தாட்சிப் பத்திரத்தில் கைச்சாத்திட [illegible] கைகள் இல்லை. இருந்த ஒரு விரலின் துணையுடன் அடையாளத்தைப் பதித்து திருமணத்தை உறுதிப்படுத்திக் கொண்டான் இந்த இராணுவ வீரன். இனம் மதம் மொழி—இந்தியாதி உணர்வுகள் மலினப் படுத்தப்பட்டு, வெறியூட்டப்பட்டு இந்த நாட்டில் மனித நேயம் கடைச்சரக்காக்கப்பட்டதால் காலமெல்லாம் கண்ணீரோடு வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஆயிரமாயிரம் சிங்கள, தமிழ் முஸ்லிம் மக்களில் ஒருவர் இந்த ரூபட்ன. 26.01.92



## "உரிமைகளை வென்றெடுப்பதற்கான பாதையில் நாம் இன்று எங்கே நிற்கிறோம்?"

**(இன்றைய நிலை குறித்த ஓர் விமர்சனக் கட்டுரை)**

பல்வேறுபட்ட அனுபவங்களூடாக இன்று இலங்கை, இந்தியா, ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஈழத்தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை விரும்பியோ அன்றில் விரும்பாமலோ அவதானித்து வருகின்றனர். இதன் மூலம் ஒவ்வொருவரினதும் மனதின் அடித்தளத்தில் "இப்படித்தான் ஈழத்தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியும் என்ற ஒரு தீர்வு" குறித்த கருத்துப் படிந்திருக்கும் என்பது உணர்ந்து கொள்ளப்பட்டிருக்கும் இன்றைய உண்மை! சிலர் "ஈழம் வெறும் யுத்த களமே அன்றி, இனி ஒருபோதும் வாழ்நிலமாக முடியாதென" இலங்கை அரசு, அனைத்து இயக்கங்கள் இவ்விரண்டினதும் வெளிநாட்டுச் சக்திகள் நடந்து கொண்ட முறைகளைக் கொண்டு விரக்தியான நிலையினையும்கொண்டுள்ளனர். பலர் "காலம் உண்மையினை உணர்த்தும்" எனப் பொதுவாக கூறி முடிவில்லாத விவாதங்களுக்கு முற்றுப்புள்ளியிடுவது வழமை.

தமிழர்களின் உரிமைப் போராட்டங்களைத் தொடர்ந்து எழுந்த ஆயுதக்கலாச்சாரம் - அவற்றினால் மக்கள் கண்ட இலாபமில்லாத இழப்புக்கள் - இவற்றை முன்பே உணர்ந்து கொண்டவர்களின் எச்சரிக்கைகள் - இளைஞர்கள் உட்பட பொதுமக்கள் பலராலும் அலட்சியப்படுத்தப்பட்ட நிலைகள்... மெல்ல மெல்ல மாறி தவறுகளை உணர்ந்து கொள்ள ஆரம்பித்துள்ள சமகால சூழலில் - புதைந்துள்ள நல்ல கருத்துக்களை மீளப்பெற்று சம்பந்தப்பட்ட தரப்புக்களில் முன்வைக்கப்பட வேண்டிய கடமை அறிவுஜீவிகளின் கட்டாய கடமையாகிறது. இன்றைய இந்த சூழ்நிலை நிச்சயமாக கடந்த காலங்கள் ஏற்படுத்திச் சென்று விட்டுள்ள கசப்பான அனுபவங்கள் மூலம் நிகழ்காலம் தந்துள்ள பாடம் என்பதால் "காலம் எமக்கு உண்மைகளை உணர்த்தியுள்ளது" என்பது உண்மை தான்"

உண்மைகளை புரிந்து கொள்ள மறுத்த நேரத்தில்; காலத்திடம்பொறுப்பை விட்டவர்களும், மனதில் திட்டங்களை வைத்துள்ளவர்களும் முன்வந்து பங்களிப்புச் செய்யும் நேரம் இது. எனவே எழுந்து வாருங்கள், ஒன்றாய் சேருங்கள், கலந்துரையாடுங்கள், "ஒருமித்த தீர்வுகளை" இயக்கங்களிடமும் அரசிடமும் வலியுறுத்துங்கள், அதிகாரத்தை இருதரப்பிலும் இருந்து பறித்தெடுங்கள், அந்த அதிகாரங்களைத் தீர்வுக்குப் பயன்படுத்துங்கள், மண்மீட்பு நிதியெனவும் அவசரகால நிதியெனவும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக நிதியெனவும் கேட்கும் பணவுதவிகளை நிறுத்துங்கள், வேடிக்கை பார்க்க ஊர்வலத்தின் பின்னால் செல்வதை விட்டு அரசு, இயக்கங்கள் இரண்டிற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மைகளை உணர்த்த நீங்களே ஊர்வத்தை நடத்துங்கள், உண்மைகளை உணர்ந்தவர்களே "மக்கள் அழிக்கப்படும் முன்பே" விழித்தெழுங்கள்!

குறுகிய இராணுவ இலாபங்களுக்காக "யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தைகள், சர்வதேச உதவிக்கரங்கள்" போன்றவை இயக்கங்களால் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை தடுத்திடாது போனால் அவை அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகி விடும் அபாயம் அனைவராலும் உணரப்பட வேண்டும்! வெளிநாடுகளில் "எம்மவர்கள்" எனத் தம்மைத் தாமே அழைத்துக் கொள்ளும் "வேங்கைகள்" புரிந்த புரிந்துகொண்டிருக்கும் சட்டவிரோதச் செயல்கள், கொலைகள் எல்லாம் அம்பலமானதுடன் - மேலும் பல வெளிவரும் சூழலில் - அந்நாட்டு தேசிய நலன் கொண்ட வெறிச் சக்திகளின் நடவடிக்கைகள் அதிகரிப்பதும், நெருக்கடிகள் உருவாவதும் தமிழர்கள் தொடர்ந்து வெளிநாட்டு மண்ணில் வாழ்வது நீண்ட காலக் கண்ணோட்டத்தில் ஆபத்தாக மாறும் என்பது உண்மை. மொத்தத்தில் இலங்கையிலானாலும் வெளிநாடுகளில் ஆயினும் வாழும் இலங்கைத் தமிழர்கள் தேடும் "உரிமையும் உயிருக்கு உத்தரவாதமும்" ஆகும்.

பல இயக்கங்கள் தமது தவறுகளை தாம் ஒப்புக்கொண்டு முடிந்த வரையில் எதிர்த்தரப்பு நிலைமைகளை தமிழர்களிற்கு சாதகமாக்கும் முயற்சியில் இறங்கியுள்ள வேளையில் ஆரம்பகால தனிநபர் போராட்ட காலம் தொட்டு இன்று வரையில் தமது செயற்பாடுகளை (போராளிகள் உட்பட பொதுமக்கள் கொலை, கொள்ளை, மனித உரிமை மீறல்கள்) மறைத்தும், மறைக்க முடியாதவிடத்தில் நியாயப்படுத்தியும் வரும் புலிகள் இயக்கத்தினர் மக்களின் பாதிப்புக்களை உணர்ந்துகொள்ளத் தவறியதுடன், அந்த மக்களின் பணத்தில் தமது தவறுகளை மறைத்து சப்பைக் கட்டுக் கட்ட பிரச்சாரங்களைச் செய்து அதே மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்வது வேதனையானது. இம் மாய நிலைகளை மாற்ற அனைத்து அறிவுஜீவிகள் உட்பட பொதுமக்களும் முன்வர வேண்டியதே இன்றைய தேவையாகிறது. எனவே புலிகளும் தமது தவறுகளை ஒப்புக் கொள்ளவேண்டும்; இல்லையேல் ஒப்புக்கொள்ள வைக்க நிர்ப்பந்திக்கும் வகையில் சகல தரப்பையும் பொதுமக்கள் புலிகள் மீது பிரயோகிக்கவேண்டும். எவ்வளவு காலத்துக்கு எமது சகோதரர்களை அவர்களின் கொலைக்கிடங்கிற்கு அனுப்புவதைப் "போராட்டம்" என ஏற்று முழு இனத்தையும் அழிவிற்கு கொண்டுசெல்ல ஒத்துழைக்கும் வேதனை கலந்த வெட்கக் கேட்டைச் செய்யப் போகிறோம்!

மக்கள் முன்பாக போராளிகள் "சுயவிமர்சனம்" செய்யப்பட வேண்டும். அது மட்டுமே நேரிய பாதைக்கு இன்றைய இனத்தை இட்டுச் செல்லும்; பிரச்சினைகள் தொடர்பாக இயக்கங்களிடையே உள்ள கருத்துக்கள் மக்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட வேண்டும்; மக்கள் முன்னின்று இயக்கங்களிடையே ஒற்றுமையினை ஏற்படுத்த வேண்டும்., இதற்கு முன்னிலை வகிக்க தனிநபர்களோ, வெளிநாடுகளோ அனுமதிக்கப்படக் கூடாது!



ஒருசிலர் தவிர்ந்த அனைவரும் தம் சொந்த வாழ்வை விட்டு விடுதலை அமைப்பில் சேர முன்வந்தமை "பொது நலம்" என்பது உணரப்பட வேண்டும். அதிலிருந்து அனைத்து விடயங்களும் "மக்கள், அரசு, அமைப்புக்கள்" என்ற மூன்று தரப்பினரும் பேசி முடிவு செய்து செயற்பட வேண்டும். இதுவே இன்றைய தேக்கத்தினை நீக்க உதவும்!

"ஷோபனப்பிரியன்"
(இலண்டன்)

# புலிகளின் புதிய புலம்பல்

தாங்கள் நடந்துவந்த பாதையில் ஏராளம் ஏராளமாய் மனிதப் படுகொலைகளை நடாத்தி, தமதுபாதையை இரத்தச் சேறாக்கி, சூழலையே பிணவாடையினால் நனைத்தவர்கள் புலிகள். முஸ்லிம், சிங்கள இனங்களை வெட்டிச்சாய்த்த போதும் சரி, தமிழினத்தின் அரசியல் தலைவர்கள், சமூகப்பிரமுகர்கள், கல்விமான்களைக் காரணமின்றிப் படுகொலை செய்த போதும் சர்வ சாதாரண விடயமாகக் கருதி வந்தவர்களே புலிகள், அவர்கள் கூறும் காரணங்களைக் கொலைக் கலாச்சாரத்துள் வாழும் தமிழர்களால் மறுதலிக்க முடியாதிருந்தமை புலிகளின் கொலைப் பட்டியலை நீட்டிக் கொண்டுவிட்டது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்மீது நடாத்திய படுகொலையைப் புலிகள் சாதாரண மின்கம்ப மரண தண்டனை போலவே எண்ணியமை இன்று புலிகளே எதிர்பார்க்காத வகையில் அவர்களுக்குச் சவக்குழி வெட்டிவிட்டுள்ளது. ''ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைகளில் உதவ நாம் தயார்'', ''இந்தியப் படைகளினால் பாதிக்கப்பட்டவர்களே குழு நிலையில் இக் கொலையைச் செய்துள்ளனர்', ''ராஜீவின் கொலைக்கும் எமக்கும் எதுவித தொடர்பு மில்லை''. என்றெல்லாம் புலிகளின் தலைவர் உட்பட பல புலிப் பிரமுகர்கள் பலதிசைகளிலிருந்தும் வழமையான தமது பாணியில் மறுப்பறிக்கைகளை விடுத்து மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களை மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்தை குறிப்பாக, தமிழக மக்களை, இந்திய மக்களை ஏமாற்ற நினைத்தமை பொய்த்து விட்டது.

தமிழ் நாட்டில் தமக்கு ஏற்பட்டுவந்த மோசமான பின்னடைவுகளால் வெருண்டு போன புலிகள், தம்மைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் உறுதியாகவும், பரவலாகவும் வைக்கப்பட்டு வந்ததைக்கண்டு அக்காலத்தில் இந்திய அதிகாரிகள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்வாதிகளிடம் புலிகள் சம்பந்தமாகக் காணப்பட்ட குழப்ப நிலையைப் பயன்படுத்தி இந்திய அரசின் கண்ணில் மண்ணைத் தூவி தம்மைப் பாது காத்துக் கொள்ள விரும்பியதை, தடையுத்தரவு பிறப்பிக்க முற்பட்ட காலத்தில் பாலசிங்கம் இந்திய அரசுக்கு விடுத்த நட்புறவுக் கோரிக்கையும், புலிகளிடம் கையேந்தி நின்று தம்மை வளர்த்த நெடுமாறன், வீரமணி போன்ற அடிவருடித்தனமான அரசியல் வாதிகளின் தமிழ் மக்களின் பாதுகாப்பு, போராட்டம் பற்றிய கொச்சைத்தனமான அறிக்கைகளும் தெளிவாகக் காட்டுகின்றது.

அடிக்கடி சமாதானக் குழுக்களை வரவழைத்து தம்மை ஓர் 'சமாதானப் பிரியர்கள்' என இனங்காட்டி சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதன் மூலம் தம்மீதான இந்திய அரசின் தடையுத்தரவை நிறுத்தி விடலாம் எனப் பகீரதப் பிரயத்தனம் செய்த புலிகள் தடையுத்தரவின் பின் 15-05-1992 அன்று தலைமையகத்தினூடு விடுத்த அறிக்கையானது நடுக்காட்டில் கண்ணைக் கட்டி விட்டவர்களது புலம்பலைப் போன்றதாகவே உள்ளது.

இலங்கையில் புலிகளின் தாக்குதலில் ஆயிரமாயிரம் இந்திய வீரர்கள் பலி கொள்ளப்பட்டு ஊனமாக்கப்பட்ட போதும் தமக்குத் தேவையான வெடிமருந்துகளையும், ஆயுதங்களையும் தருவிப்பதற்கான தளமாகத் தமிழ் நாடு புலிகளால் பயன்படுத்தப் பட்டு வந்தபோதும் புலிகளைத் தடை செய்யாமல், தனி நபர் ஒருவர் மீதான படுகொலையைக் காரணம் காட்டி தடையுத்தரவைப் பிறப்பித்திருக்கும் இந்திய அரசின் நடவடிக்கையைத் 'தனது குறுகிய தேசிய நலனிலும் உடனடி சுய அரசியல் லாபத்தையும் கருத்திற் கொண்டு இந்தியா எடுத்துள்ள நடவடிக்கை' எனக் கூறும் புலிகள் பிராந்திய அரசியலில் இந்தியாவின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமையின் வெளிப்பாட்டையும், இன்று வரையில் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தனது தேச நலன்களை மீறி இந்தியா கொண்டிருக்க வேண்டிய அக்கறை குறித்த புலிகளின் எதிர்பார்ப்புக்களையும், அரசியல் வங்குரோத்துத்தனத்தையும் காட்டுகிறது.

மேலும் தமது அறிக்கையில் 'இந்திய அரசுதான் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சியும் அளித்து ஆயுதங்களையும் வழங்கி ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டிவிட்டது' எனத் தெரிவித்து தமிழ்த் தேசிய இனப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியதோடு காட்டியும் கொடுத்து விட்டார்கள்.

எழுபதுகளின் பிற்பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு 83 வரை சுயபலத்தின் அடிப்படையில் வளர்ச்சி கண்டு வந்த தமிழ்த் தீவிரவாதிகளின் ஆயுதப் போராட்ட வரலாற்றை மறந்து புதிய வரலாறுகளை உருவாக்கும் புலிகள் தமது ஆயுதப் போரட்ட வரலாற்றை, சத்தியநாதன், சார்ள்ஸ் அன்ரனி போன்றவர்களையும் கூட மறந்து விட்டார்கள் போல உள்ளது.

3 6. Juli 1992

வடமாராட்சித் தாக்குதலில் ஏற்பட்ட தோல்விக்கு இந்திய உளவுப்பிரிவினது தவறான தகவல்களும், ஆலோசனைகளுமே காரணமெனப் பிற்காலத்தில் பேட்டியளித்து தமது அரசியல், இராணுவ ஆலோசகர்களையும், ஏஜெண்டுகளையும் தோலுரித்துக் காட்டிய பாலசிங்கம் போன்ற புலி இயக்க புத்திஜீவிகளுக்கும், புலிகளின் தலைமைக்கும் ஏற்படும் பதட்டமும், குழப்பமும் எதிர்காலத்தைப் புரிந்து கொள்ளாத நிலையும், அவர்களின் அறிக்கைகளில் போராட்டம் குறித்தும், புலிகள் குறித்தும் புதிய வரலாறுகளையும், காட்டிக் கொடுப்புக்களையும், அடிவருடித் தனங்களையும் வெளியாக்கிக் கொண்டு வருகின்றன.

புலிகளின் புலம்பல் தனமான அறிக்கைகளில் எதிர்காலத்தில் இன்னும் பல புதியவைகள் கிடைக்கும்போது எமது மக்களால் புலிகள் முழுமையாக உணரப்பட்டு ஒதுக்கப்படுவார்கள் என நம்புவோம்.

அதர்மனின் சபையிலிருந்து.




3 7. Juli 1992

www.tamilarangam.net




பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தனக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும் (குறள்)

வேங்கைகளுக்கு இந்தியா தடை போட்டது பாராட்டுக்குரியது என்று பலர் சொல்லும் போது கனடாவிலிருந்து வெளிவரும் தாயகம் பத்திரிகைக்கு வேறு ஒரு அபிப்பிராயம். இந்தத் தடையிடும் சமாச்சாரங்களே வேங்கைகளின் மூளையிற் தான் முதலில் உதித்ததாம் எப்படி? இப்படித்தான் என்கிறது தாயகம் தரும் கார்ட்டூன்

★ நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கும் கலையைக் கற்றவனிடத்தில் தான் பொறுமை கூடி கொண்டிருக்க முடியும்.

★ நல்ல நிலத்தில் தான் எல்லா விதமான பொருள்களும் நன்றாக விளையும். அது போலத்தான் விசுவாசமுள்ள இதயத்தில் நல்லவை பிறக்கும்.

★ உங்களுடைய பெயரைப் பளிங்குக் கற்களில் செதுக்குவதைத் தவிர்த்து மற்றவர்களின் இதயங்களில் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் படி நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.

★ பெருமை களங்கத்தினால் நிலவொளி கறுப்
சந்திரனிடமுள்ள சான்றோரின் புகழில் களங்க
பாகத் தெரிவதில்லை. அவர் தம் பெருமை குன்றுவ
மேற்படுத்தினாலும்,
தில்லை.

3 8. Juli 1992

# உழைக்கும் மக்களுக்காகவே மார்க்சிசம்..!

நான் இலங்கை அரசினால் தேடப்பட்டபோது, ஆரம்ப காலத்தில் நான் பிறந்து, வளர்ந்து வாழ்ந்த யாழ்ப்பாணத்து படித்த உயர்நிலை மக்களின் சூழ்நிலை எனக்குப் பாதுகாப்புத் தரவில்லை. கிளிநொச்சி, வவுனியா, போன்ற பிரதேசங்களில் விவசாய மக்களும், மலையகத் தோட்டத் தொழிலாளரும், மட்டக்களப்பு பிரதேசத்தின் மீனவ சமூகத்தவருமே எனக்கு அடைக்கலம் தந்தார்கள். இக்காலகட்டத்திலே என்னால் இம்மக்களது வறுமையையும், எளிமையையும் நேரடியாக உணரக் கூடியதாக இருந்தது. நாம் அடையப் போராடும் தமிழ்ஈழம் இத்தகைய மக்களது அவல வாழ்க்கைக்கு விமோசனம் தரமுடியாவிட்டால் அது எமது உண்மை விடுதலையாக அமையாது என்பதைத் தெளிவாக இக்காலத்தில் உணர்ந்தேன். இதன் பின்புதான் தமிழீழப் போராட்டத்தைத் தமிழ்மக்களின் சகல அடக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டமாக மாற்றியமைக்க வேண்டிய தேவையை உணர்ந்தேன். இதன்பின்பு மார்க்சிச தத்துவத்தைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் எனக்குள் மேலோங்கியது. என்னைப் போலவே எனது தோழர்களும் மார்க்சிச சித்தாந்தத்தில் நம்பிக்கை கொள்ளலானார்கள். நாம் மார்க்சிசவாதிகளாக மாறியது இப்படித்தான்.

தோழர் உமாமகேஸ்வரன்

3 9. Juli 1992

குரல்கள்! குரல்கள்!! குரல்கள்!!!

"சுதந்திரப் பிரகடனத்தை மக்கள் கடைப்பிடிக்கும் வரை சுதந்திரத்தை அடைவது நிச்சயம். விடுதலை நமது கரங்களிலேயே உள்ளது. எவரும் அஞ்ச வேண்டாம். போராட்டம் தொடரட்டும்"

— தென். ஆபிரிக்காவில் தூக்கிலிடப்பட்ட நீக்ரோ கவிஞர் பெஞ்சமின் மலாயஸ் அவர்களின் கடைசிச் செய்தி.

பெறுனர்:-

அனுப்புனர்:-

Tamileelam Information
Bureau (T.I.B.)
Postfach 7
3432 Goldbach
Switzerland

வெளியீடு: தமிழீழ தகவல் நடுவ சுவிஸ் கிளை. - T.I.B SWISS BRANCH

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்